# குரு ஆராதனை

(ஸ்ரீ தட்சணாமூர்த்தி வியாழபகவான் வழிபாடும் தோத்திரமும்)



வித்தியாசாகரம்
சிவஸ்ரீ சபா.வாஸுதேவக்குருக்கள்

உ

திருமதி. இரா. வாசுதேவன்

T.P. 021 225 0100

உ

சிவமயம்

ஓம் தட்சணாமூர்த்தி குருவே நமஹ

# குரு ஆராதனை

ஸ்ரீ தட்சணாமூர்த்தி, வியாழபகவான்
வழிபாடும் தோத்திரமும்

ஞான இரத்தினம்
சித்தன்கேணி

**வித்தியாசாகரம் :**
**சிவஸ்ரீ சபா.வாஸுதேவக்குருக்கள்**

**2009.07.25**
(ஆடிப்பூரத் திருநாள்)

நூலின் பெயர் : குரு ஆராதனை
மொழி : தமிழ்
நூலாசிரியர் : சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள்.
வெளியீடு : "ஞானரத்தினம்"
சிவன்கோவில்
சித்தன்கேணி
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
ஆண்டு : 2009.07.25
பக்கங்கள் : xviii + 83
தாள் : 70g
அச்சிட்டோர் : சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ்,
காசிப்பிள்ளை கட்டிடம்,
சங்கானை.

Name of book : Guru Aarathanai
Language : Tamil
Editor : Sivasri Saba Vasudevakkurukkal
Publisher : Gnanarathinam
Rights : Author
Year : 2009.07.25
Pages : xviii + 83
Paper : 70g
Printers : Saraniya offset printers,
Kasippillai Building,
Chankanai.

உ
சிவமயம்

**ஆலடிப்புலம்**

**ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி திருக்கோவில்**

**சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள்**

அறங்காவலர், ஸ்தானீக குரு

---

**ஆலடிப்புலம், ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவலரும் ஸ்தானீக குருவுமாகிய சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

சைவ மக்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் குரு ஆராதனை என்னும் நூலை சித்தன்கேணி சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.சபா.வாஸுதேவக்குருக்கள் அவர்கள் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இறையருள் இன்றி எதனையும் நாம் செய்து முடிக்க இயலாது. அந்த இறையருளுக்கு பாத்திரமாவதற்கு எமக்கு ஒரு குருவினுடைய வழிப்படுத்தல் மிக அவசியமாகும். உலகியல் வாழ்வில் சுக போகங்களை திருப்தியாக அனுபவித்துக் கொள்வதற்கும் சரி ஆன்ம ஈடேற்றத்திற்காக பக்தி ஆராதனைகள் முதலியன ஆற்றுவதாயினும் சரி அதற்கு ஒரு வழிகாட்டி தேவை ஆகும். அவர் எமக்கு குருவாக இருந்து நல்வழிப்படுத்துவார். அந்த குருவுக்கெல்லாம் மஹா குருவாக திகழ்பவர் ஸ்ரீ தட்சணா மூர்த்தியாவார். அந்த மஹா குருபற்றியும் கிரகங்களில் ஒருவராகத்திகழும் வியாழபகவான் பற்றியும் அற்புதமாக குரு ஆராதனையாக தந்துள்ளார் இந் நூலாசிரியர்.

ஞானரத்தினம் வெளியீடு மூலம் பல அரிய நூல்களை வெளியிட்டு சைவ மக்களின் ஆன்மீக அறிவிற்கு உதவிபுரிந்துள்ளார். இந்நூல் வியாழபகவானின் கிரக பிரீதி சம்பந்தமான விடயங்கள் பலவற்றினை உள்ளடக்கி இருப்பது கிரகவழிபாட்டு அன்பர்களுக்கு மாத்திரமல்லாது சோதிடம் கூறும் அன்பர்களுக்கும் வழிகாட்டி நூலாக அமையும் எனலாம். அந்தளவிற்கு மிக சிறப்பாக எழுதியிருப்பதைக் காணலாம்.

சிறந்த இந்நூலினை ஆக்கிய சிவஸ்ரீ.சபா.வாஸுதேவக் குருக்களுக்கு எனது குலத்தெய்வம் ஆலடிப்புலம் கந்தனின் திருவருளும் இவர்தம் குலத் தெய்வம் சிவகாமி உடனுறை சிதம்பரேஸ்வரர் திருவருளும், குருவருளும் கிடைக்க எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொண்டும் இவ் வெளியீட்டு நிகழ்வும் சிறப்புற அமைய வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

சுபம்



இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை.

சித்தாந்த இரத்தினம்,
**டாக்டர் மா.வேதநாதன்,** M.A., Ph.D.

இந்துநாகரிகத்துறை தலைவர் வழங்கிய

# வாழ்த்துரை

சித்தன்கேணி சிவன் கோயில் பிரதம குரு சிவநெறிச் செம்மல் சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள் எழுதிய குரு ஆராதனை - ஸ்ரீ தட்சணாமூர்த்தி, வியாழபகவான் வழிபாடும் தோத்திரமும் என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துமதத்தில் குருவுக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக் கிறது. சைவ வழிபாட்டு மரபில் குரு வழிபாடு சிறப்புடன் விளங்குகிறது.

இந்நூலாசிரியர் ஓர் ஆன்மீகச் சொற்பொழிவாளர்; சமய ஒழுக்கமுடையவர்; சிவப் பொலிவுடையவர்.

இந்நூலில் தட்சணாமூர்த்தி மற்றும் குருபகவான் பற்றிய அரிய கருத்துக்கள் எல்லோருக்கும் எளிதாக விளங்கும் வகையில் தொகுத்துக் கூறப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

இந்நூலாசிரியர் இது போன்ற மேலும் பல நூல்களைப் படைத்திட வாழ்த்துகின்றோம். இறையருள் என்றும் அவருக்கு என்றும் கிடைக்க இறைஞ்சுகின்றோம்.

**டாக்டர் மா.வேதநாதன்,** M.A., Ph.D.,
தலைவர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

25.07.2009

**வித்தியாபூஷணம்**

**பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா** B.A.(Hons)

(கோப்பாய் சிவம்)

**அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

இந்துசமயத்தின் வழிபாட்டு முறைகளில் திருவுருவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சிவாகம நெறிமுறையில் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, பிரார்த்தனை முதலிய வழிபாடுகளில் ஈடுபட்டு, முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களில் படிமுறையாக உயர்ந்து செல்லத் திருவுருவங்களே ஆதாரமாக அமைகின்றன.

சொரூபலட்சணம் என்னும் உயர் நிலையாகிய குணங்குறிகளற்ற ஒரே பரம்பொருள் நிலையிலிருந்து சிவப்பிரமம் ஒருபடி கீழிறங்கிவந்து ஆன்மகோடிகளின் நன்மைக்காகப் பல்வேறு பெயர்களையும் பல்வேறு திருவுருவங்களையும் தாங்கிப் பேரருள் செய்கிறது. அடியார்கள் தத்தமது விருப்புக்கும் தேவைக்கும் தகுதிக்கும் இசைந்த வடிவங்களில் இறைவனைக் கண்டறிந்து வழிபடுவதற்கான வாய்ப்பு இந்து சமயத்தில் மாத்திரம் காணப்படும் சிறப்பாகும்.

புராணங்கள் இறைவனின் இத்தகைய பல்வேறு வடிவங்களின் வரலாறுகளை எடுத்துக்கூற, இவற்றின் உருவ அமைதிகளை ஆகம வழிவந்த சிற்ப சாஸ்திரங்கள் விபரிக்க, வழிபடும் முறைகள், கிரியைகள் முதலியவற்றைச் சிவாகமங்களும் அவற்றின் வழிவந்த பத்ததி நூல்களும் இயம்புகின்றன.

நாம் நமது உலகியல் வாழ்க்கையில் நல்லாசைகளை நிறைவேற்றிச் சுகவாழ்வு வாழ்வதற்கும் ஆன்மீக மேம்பாடு அடைந்து ஆண்டவனை நாடிச் செல்வதற்கும் இவற்றைப் பற்றித் தெரிந்திருப்பது நன்மைபயக்கும். மிக உயர்நிலையிலிருக்கும் இத்தகைய விடயங்களை அவ்வப்போது அறிஞர்பெருமக்கள் தேடியெடுத்து எம்மனோருக்கு எளிதில் கிடைக்கும்படி

வெளியிட்டு வருகிறார்கள். அதனால் சாதாரண நிலையிலுள்ள பக்தர்கள் பலரும் பயன்பெறுகின்றனர்.

இவ்வகையில் சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ ச.வாஸுதேவக்குருக்கள் அவர்களும் தட்சணாமூர்த்தி பற்றிய சிறு நூலொன்றை இப்போது வெளியிடுவது மிகவும் போற்றத்தக்க பணியாகும். முன்னரே பல சிறு நூல்களை உருவாக்கி வெளியிட்டிருக்கின்ற குருக்களவர்கள் பல்வேறு துறைகளிலும் ஆர்வமும் ஆற்றலும் உடையவர். தாம் கற்றறிந்த விடயங்களை மற்றவர்களுக்கும் பயனுற வழங்க வேண்டுமென்னும் பேராவல் காரணமாக அவர் செய்யும் இப்பணி மேன்மேலும் வளரவேண்டும்.

சைவர்களின் முழுமுதற் கடவுள் சிவன். சிவனுடைய அருவநிலை சிவம், சக்தி, நாதம், பிந்து என்னும் நான்கு வகைகளில் அமைய, அருவுருவ நிலை சதாசிவம் என்னும் சிவலிங்கத் திருமேனியாக அமைய, உருவ நிலையில் மகேஸ்வர வடிவங்கள் விபரிக்கப்படுகின்றன. சதாசிவப் பெருமானின் ஈசானம் முதலிய ஐந்து முகங்களிலிருந்தும் இந்த மகேஸ்வர வடிவங்கள் தோன்றின. அறுபத்துநான்கு வடிவங்கள் இவற்றுள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அதிலும் சிறப்பாக இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்கள் விதந்துரைக்கப் படுகின்றன.

ஆனால்,வைஷ்ணவ சம்பிரதாயத்திலே தேவைப்படும்போ தெல்லாம் ஸ்ரீமந் நாராயணன் அவதாரமெடுப்பதாகவும் அவற்றில் தசாவதாரங்கள் சிறப்பானவை எனவும் கூறப்படுவது போல இவற்றை நோக்க முடியாது. சிவன் 'பிறவா யாக்கைப் பெரியோன்'. அடியார்களுக்காக அவன் எடுக்கும் தோற்றப் பொலிவுகளாகவே இவற்றைக் கொள்ள வேண்டும்.

மகேஸ்வர வடிவங்களில் அகோர முகத்தில் தோன்றிய அற்புதமானதொரு வடிவமே தட்சணாமூர்த்தியாகும். இது கலைச்சிறப்பும் தத்துவச் செறிவும் அருட்பொலிவும் கொண்டதொரு மூர்த்தமாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட சிந்துவெளிக் காலத்திற்குரியதான அகழ்வாராய்ச்சியில் யோகி வடிவமொன்று கண்டெடுக்கப்

பட்டிருப்பது தட்சணாமூர்த்தியின் பழமைக்குத் தொல்பொருட் சான்றாகும். பழந்தமிழ் மக்களும் இம்மூர்த்தியை வழிபட்டிருப்பது 'ஆலமர் செல்வன்' என்ற சங்கச் செய்யுட் சொற்றொடர் மூலம் உணரலாம்.

காமிகாகமம் அஷ்ட தட்சணாமூர்த்திகளைக் கூறுகிறது. இவற்றைவிடப் பல்வேறு வடிவங்களும் வேறு நூல்களில் காணப்படுகின்றன. பல்லவர்காலக் குடைவரைச் சிற்பங்களி லிருந்து சோழர்காலச் செப்புப் படிமங்களினூடாக இன்றைய புலம்பெயர் நாட்டுக் கோயில்கள் வரை எல்லா இடங்களிலும் எல்லோராலும் விரும்பி வழிபடப்படும் மூர்த்தம் இந்த தட்சணாமூர்த்தி.

இசைப்போதனை நல்கும் வீணாதர தட்சணாமூர்த்தி, சாஸ்திரங்களைப் போதிக்கும் வியாக்கியான தட்சணாமூர்த்தி, யோகமார்க்கம் புகட்டும் யோகதட்சணாமூர்த்தி, ஞான முத்தியருளும் ஞான தட்சணாமூர்த்தி என நால்வகை வடிவங்கள் அதிகம் பிரபலமானவை.

கோஷ்ட தெய்வம் என்ற நிலையிலே இருக்கும் இவரது வடிவங்களை ஸ்தூபிகளிலும் ராஜகோபுரங்களிலும் பல்வேறு நிலைகளில் காணலாம். கோஷ்டத்திலிருந்து சற்றே முன்னிலைப்படுத்தித் தனிச்சந்நிதானத்தில் பிரதிஷ்டை செய்து சிறப்பு வழிபாடுகள் மூலம் மகிழ்வித்து நல்வாழ்வு காண முற்படுகின்றனர் இன்றைய ஆன்மீகவாதிகள். வியாழன் என்னும் குருபகவான் இவரோடு கொண்டிருக்கும் தொடர்பு காரணமாக வியாழக் கிழமைகளில் இவருக்கும் குருபகவானுக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இந்த விபரங்களை இந்நூலாசிரியர் சுவையாகவும் பயனுள்ள முறையிலும் விரித்துரைப்பதுடன் பிரார்த்தனைக்குரிய பல பாடல்களையும் தோஷ பரிகார முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்நூலாசிரியர் இன்னும் பல நூல்களை இவ்வாறு வழங்குவதோடு தமது குருத்துவ சேவை மூலமும் ஆன்மீக வேட்கையுடையோருக்கு நல்வழி காட்டி நலம் சேர்க்க வேண்டுமென வேண்டி எல்லா நலன்களும் இவர் பெற்று வாழப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

உ
சிவமயம்

# முகவுரை

இலங்கை என்னும் பசுவின் மடியாக விளங்குவது யாழ்ப்பாணம். இவ் யாழ்ப்பாணத்தினை தெய்வ மணம் கமழும் திருநாடாக எடுத்துக்காட்டுவது திருக்கோயில்களே. எமது யாழ்ப்பாணம் சிவ பக்தியில் ஊன்றித் திளைக்கும் சிவபூமியாகும். இறையுணர்வில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட இறையன்பர்கள் தாம் அடையப் போகும் உயரிய பயன்களை நன்கு அறிய மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு அறிந்து அத்திருத்தலங்களுக்குச் சென்று முறையாக வழிபடுதலை தம் சிறந்த கடமையாகக் கொண்டுள்ளனர். ஆலயம் செல்லும் அன்பர்கள் அத்திருத்தலத்தில் உறையும் தெய்வங்களை தேவாரப் பாடல்களாலும், தோத்திரங்களாலும் பாடிப் பரவி தமது வேண்டுதல்களை பிரார்த்திக்கின்றார்கள். பொதுவாக மன அமைதி பெற தெய்வம் மற்றும் ஆலய வழிபாடு முக்கியமானது. இதனைக் கருத்தில் கொண்டுதான் அக்காலத்தில் மாபெரும் முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள், மகான்கள், மற்றும் அரசர்கள் ஆகம முறைப்படி பல ஆலயங்களை அமைத்துத் தந்து வழிபடவும் வழிகாட்டிச் சென்றனர். அந்தவகையில் நாமும் அவர்களை பின்பற்றி செல்வதன் மூலம் நற்பயன் அடையலாம்.

இடர் சூழ்ந்த இந்தக் காலகட்டத்தில் சொல்லுதற்கரிய துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு கடவுள் நம்பிக்கை தான் இந்த வாழ்க்கையில் பிடிப்பையும் பற்றுதலையும் ஏற்படுத்துகின்றன. அந்த நம்பிக்கைதான் அவர்களது மனநிலை பிறளாது தைரியமாக வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளை எதிர் கொண்டு சமாளிக்கக் கூடியதாக அமைகின்றது எனலாம். மக்களுக்கு கடவுள் நம்பிக்கையை ஊட்டுவதில் திருவுருவ வழிபாடு மிகப் பிரதான இடத்தினை வகிக்கின்றன. ஊசலாடும் மனதினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் அமைதியான நல்வாழ்வு பெறவும் இத் தெய்வ திருவுருவ வழிபாடு மிகவும் உதவுகின்றன.

அத்தெய்வத் திருவுருவ வழிபாட்டில் தட்சணா மூர்த்தி திருவுருவ வழிபாடு மிகவும் அற்புதம் நிறைந்ததாகும். தட்சணா மூர்த்தி வழிபாடு வாழ்வில் ஏற்படும் சிக்கல்களில் இருந்து விடுபட வைப்பதோடு மட்டுமல்லாமல் அதற்கும் மேலாக உயரிய யோக ஞான மார்க்க நெறிகளையும் மன அமைதியையும் நல்கின்றன.

எம் வாழ்க்கைச் சக்கரத்தினை சுழலச் செய்வதில் நவநாயகர்களின் பங்கு அளப்பரியதாகும். நாம் செய்த பாவ புண்ணியங்கள் முற்பிறப்பு வினைகள் இவைகளைச் சீர்தூக்கி எம்மை இன்ப துன்பங்களுக்குள் உட்படுத்தி ஆட்கொள்பவர்கள் இந்த நவ நாயகர்களே. இவர்கள் பிடியில் இருந்து விடுபடவும் எமது துன்பங்கள் அகலவும் இந்த நவ நாயகர்களை வழிபடுதல் அவசியமாகும். நவநாயகர்களின் வழிபாடோடு இவர்களின் அருட் தெய்வங்களையும் வழிபடுதல் அவசியமாகும். அந்தவகையில் குரு பகவானின் அருட் தெய்வமாகப் போற்றப்படுபவர் ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஆவார். தேவகுருவாகப் போற்றப்படுபவர் வியாழபகவான் என்னும் திவ்ய நாமம் பூண்டுள்ள குருபகவான். இவர் எம் மனதில் உள்ள நல்ல குணத்திற்கு அதிபர் ஆவார். பிரபஞ்ச குருவாக மஹா குருவாகத்திகழ்பவர் ஸ்ரீ தட்சணாமூர்த்தி பகவான். தட்சணா மூர்த்தி பகவான் கிரக வழிபாடுகளையும் கடந்து உயரிய மேலான இம்மை மறுமைக்கான வழி பாட்டுக்குரியவராகவும் திகழ்பவராவார். எம் வாழ்வில் எக்காரியத்திற்கும் ஒரு வழிகாட்டல் அவசியமாகும். அந்த வழிகாட்டியை நாம் குரு என அழைக்கின்றோம். தேவைகளின் தன்மைக்கேற்ப கல்வியைப் புகட்டுபவரை வித்தியா குரு ஆசிரியர் என்கின்றோம், ஞானத்தினை போதிப்பவரை ஞான குரு என்றழைக்கின்றோம், தீட்சை கொடுப்பவரை தீட்சாகுரு என அழைக்கின்றோம். இவ்வாறு பல வழிகளில் குருவைப் போற்றுகின்றோம். இவை அனைத்திற்கும் மேலான குருவாகத்திகழ்பவர் ஸ்ரீ தட்சணாமூர்த்தியாவார். இவர் மஹா குரு என அழைக்கப்படு கின்றார். இவரை தொழுதேத்தும் போது மன அமைதி, வாழ்வில் வெற்றியும் அமைதியும், நல்லொழுக்கம், புலனடக்கம், யோகஞான சித்தி, என பலேறு நற்பலன்கள் எமக்குக் கிடைக்கின்றன.

இன்று எமது தேசத்தில் தட்சணாமூர்த்தி, வியாழபகவான் வழிபாடு மிகப் பிரபல்யம் அடைந்து காணப்படுகின்றன. எனவேதான் இவர்கள் பற்றியதான செய்திகளை மக்களுக்கு அறியக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்நூலினை உருவாக்கினேன். உயர் தெய்வமாகப் போற்றப்படும் ஸ்ரீ தட்சணாமூர்த்தி பகவானின் திவ்யமான சிறப்புத் தன்மைகள் வழிபாட்டு முறைகள், திருவருட் பேறுகள் என்பவற்றினையும் வியாழபகவானின் சோதிடரீதியான வழிபாட்டுத் தன்மைகளையும் சுருக்கமாக தந்துள்ளேன். அத்துடன் வழிபாட்டுக்குரியதான திருமுறை, தோத்திரப் பாடல்கள் முதலியவற்றினையும் தொகுத்துள்ளேன். மேலும் நவக்கிரக நாயகர்களது சில தொகுப்புக்களையும் சேர்த்தும் உள்ளேன். "இரையைத் தேடுவதோடு இறையையும் தேடு" என்பர் சான்றோர். இறையருள் வேண்டித் தொழ விரும்பல் இயல்பே. அனைவர்க்கு இவ்வரிய நூல் பல்வகையிலும் உதவிடுவதாக அமையும் என்பது என் எண்ணம்.

இந் நூல் சிறப்புற்று மலர்வதற்கு ஆசியுரை வழங்கி மேன்மையடையச் செய்த ஆலடிப்புலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவலரும் ஸ்தானீக குருவுமாகிய சிவஸ்ரீ. குமார ஸ்ரீகாந்தக்குருக்கள் அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

ஞானரத்தினம் வெளியீடாக பல வெளியீடுகளை நாம் செய்து வருகின்றோம். எமது பல்வேறு வெளியீட்டு நிகழ்வுகளுக்கு வருகை தந்து நூல்களை வெளியிட்டு வைத்ததுடன் எமக்கு நூல்கள் எழுத வேண்டும் என்னும் பெருவிருப்பினை ஊட்டுவிப்பதுடன் உற்சாகப்படுத்தியும் வருபவர் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் டாக்டர் மா.வேதநாதன் அவர்கள். இவர்கள் இக் குரு ஆராதனை பெருமையுறும் வகையில் வாழ்த்துரை வழங்கியமை எமக்கு பெருமையும் மகிழ்வும் தருவதாக அமைகின்றன. வாழ்த்துரை வழங்கிய இந்து நாகரிகத் துறைத் தலைவர் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் இன்புறுகின்றேன்.

இந்நூல் சிறப்புடன் மலர்வதற்கு எனது வேண்டுகோளையேற்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் அரிய கருத்துக்கள் அமைந்த அணிந்துரை வழங்கி பெருமைப் படுத்திய "வித்யாபூஷணம்" பிரம்மஸ்ரீ. ப.சிவானந்த சர்மா(B.A) (கோப்பாய் சிவம்) அவர்களுக்கு எனது அன்புகலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"குரு ஆராதனை" என்னும் இந்நூலினை உருவாக்குவதற்கு பல ஆதாரமான நூல்கள் தேவைப்பட்டன. இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எனக்கு பலவகையிலும் உதவிகள் புரிந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள், பொன்னாலை பண்டிதர் பொன்னம்பலவானர் ஆகியோருக்கும் இச்சந்தர்பத்தில் நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலினை அழகுற உரிய காலத்தில் அச்சில் பதிப்பித்து வழங்கிய சங்கானை சரணியா பதிப்பகத்தினருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

"ஞானரத்தினம்" வெளியீடாக மலரும் இந்நூலினை என்னை ஆட்கொண்டருளும் ஸ்ரீ சிவகாமி பாகராம் சிதம்பரேஸ்வரர் தாள் பணிந்து சைவப் பெருமக்கள் கரங்களில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**"அன்றாலின் கீழிருந்து அறிவனார்**
**அடிக்கமலம் அகத்துள் கொள்வாம்"**

"வித்யாசாகரம்"
**சிவஸ்ரீ. சபா. வாஸுதேவக்குருக்கள்**
சிவன்கோவில்
சித்தன்கேணி.
25.07.2009

# பொருளடக்கம்

ஆசியுரை (iii)

வாழ்த்துரை (v)

அணிந்துரை (vi)

முகவுரை (ix)

01. ஆல நீழற்கீழ் இருந்து அறஞ்சொன்ன ஆலமர்ச் செல்வர் - தட்சணாமூர்த்தி ---------- 01

02. பூதலத்தோர் போற்றும் வியாழபகவான் ---------- 13

03. குருபகவானின் விஷேட சோதிட இயல்புகள் ---------- 15

04. குரு வழிபாடும் சகல தோஷ நிவர்த்தியும் ---------- 17

05. குரு பகவான் தோஷம் அகல தட்சணாமூர்த்தி வழிபாடு ---------- 23

06. தட்சணாமூர்த்தி திருவருட்பா ---------- 30

07. தட்சணாமூர்த்தி ஸ்துதி ---------- 36

08. ஸகல காரியங்களினதும் சித்திக்கான ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி 40

09. தட்சணாமூர்த்தி 108 திவ்யநாமாவளி ---------- 43

10. தட்சணாமூர்த்தி கீர்த்தனை ---------- 46

11. குருபகவான் கவசம் ---------- 48

12. திருமுறைப் பாடல்கள் ---------- 53

13. கோளாறு திருப்பதிகம் ---------- 57


14. விரும்பிய பலன்கள் பெற்று மகிழ்ந்திட தேர்ந்தெடுத்த திருமுறை முத்துக்கள் ---------- 61


15. தினந்தோறும் பாராயணம் செய்யவேண்டிய நவக்கிரக துதிகள் - 66

16. நவக்கிரக ஆராதனை ---------- 73

17. தட்சணாமூர்த்தி படவிளக்கம் ---------- 82

18. ஒரே பார்வையில் நவநாயகர்கள் ---------- 83


தியான நிலை
(xiv)



# தட்சணாமூர்த்தி துணை

**வடவிடபிஸமீபே பூமிபாகே நிஷண்ணம்**

**ஸகலமுனி ஜனனாம் ஞானதா தாரமாரத் |**

**த்ரீபுவன குருமீசம் தட்சணாமூர்த்திமீசம்**

**ஜனன மரண துக்கச்சேத தக்ஷம் நமாமி ||**

வடவிருட்சத்தின் (கல்லால மரம்) அடியில் பூமியில் அமர்ந்திருப்பவரும் சமீபத்தில் சூழ்ந்திருக்கின்ற முனிவர்களுக்கு ஞானத்தை அளிப்பவரும் (போதித்தல்) ஜனனமரண (பிறப்பு இறப்பு) துக்கத்தை போக்கடிக்கவல்லவரும் மூன்று உலகங்களுக்கும் குருவாக இருப்பவருமான தட்சணாமூர்த்தி உருவிலமைந்த பரமேஸ்வரனை வணங்குகின்றேன்.



# குரு பகவான்

தேவ மந்த்ரீ விசா லாக்ஷ:
ஸதா லோக ஹிதே ரத:
அநேக சிஷ்ய ஸம்பூர்ண:
பீடாம் ஹரது மே குரு:

அமரர் அமைச்ச அகல் விழியோய்
ஆரிய குருவே நலம் தருவோய்
தமரென சீடர் புடை சூழும்
தகவுடைய குருவே துயர் தீர்ப்பாய்
ஓம். குங். குருதேவாய நம:

உ

சிவமயம்



## ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் துதி

தாபரதராகு சனாகாதி யோர்கள் தேரச்
சாரால மரநிழலில் வீற்றிருந்தே
பாபமிலா ஞானநெறி புணய்த்தியாண்ட
பரமகருணாநிதியாந் தேவதேவன்
நீபமலர் மாலைபுனை முருக வேளை
நெற்றிவிழியாற்றந்த நிமலமூர்த்தி
தீபநிரைசார் சித்தன் கேணி வாழுஞ்
சிவசிதம்ப ரேசனடி சென்னி சேர்ப்பாம்.



## ஸ்ரீ சிவகாமியம்மை துதி

கலைவளரும் நற்சித்தன் கேணி தன்னிற்
கண்ணியமார் கோயிலின்கண் வாழு மேலாம்
விலையுயந்த மணிபதித்த யாழ்கைக் கொண்ட
மேன்மையுள கின்னர ராதியர்கண் மேவும்
மலையரசன் வளர்க்கவரு பார்ப்பதிப் பேர்
மன்னுறுசீர்க் சிவகாமியம்மையே நீ
தலைமிசைவைத் துனதுதிருப் பாத மேத்தும்
தமியேற்கும் நல்வரங்கணல்கு வாயே.

# 1 ஆல நீழற்கீழ் இருந்து அறஞ்சொன்ன ஆலமர்ச் செல்வர் ஸ்ரீ தட்சணாமூர்த்தி

**“சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா: குருர் யுவா**
**குரோஸ்து மௌநம் வ்யாக்யாநம் சிஷ்யாஸ்து ச்சிந்நஸம்ஸயா:”**

ஆலமரத்தின் அடியிலே சீடர்களுக்கு ஞானோபதேசம் நடக்கின்றது. உபதேசம் பெறுகின்ற சீடர்களோ வயது முதிர்ந்தவர்கள். உபதேசம் செய்கின்ற குருவோ இளம் பிராயத்தவர். இந்த குரு வாய்திறவாமல் மௌனமாக வியாக்யானம் செய்கின்றார். அந்த சீடர்களின் சந்தேகமெல்லாம் நீங்கி விட்டது. இது ஸ்ரீ தட்சணா மூர்த்தியின் அவதார வைபவத்தினை பற்றிக் குறிப்பிடும் சுலோகமாகும்.

ஆன்மாக்களின் மீது வைத்த பெரும் கருணையினால் தம் அடியார்கள் துன்புறும் போது அனுக்கிரகிப்பதற்காக பல வடிவங்களில் ஆன்மாக்களின் இயல்புக்கு தக்கவாறு அவ்வப்போது உலகிலே இறைவன் பற்பல அவதாரங்களை எடுத்துக் கொள்கின்றான். அந்தவகையில் “ப்ரம்ம தத்துவம் மனோவாக்குகளுக்கு எட்டாதது” என்பதை உணர்த்துவதற்காக அவதாரம் செய்த திருவடிவமே தட்சணா மூர்த்தி வடிவமாகும். சிவசொருபத்தின் உச்சநிலை தட்சணாமூர்த்தி வடிவம் எனலாம். தட்சணம் என்றால் தென்திசையைக் குறிப்பதாகும். தெற்கு நோக்கியவாறு ஞானிகளுக்கு ஞானோபதேசம் செய்கின்றபடி யால் தட்சணாமூர்த்தி என அழைக்கப்படுகின்றார். தட்சணம்

என்பதற்கு ஞானம் என்றும் பொருள் கொள்வர். அதாவது ஞானிகளுக்கு ப்ரம்ம ஞானத்தினைப் போதிப்பதனால் தட்சணா மூர்த்தி என அழைக்கப்படுகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

இறைவனை தாய் என்றும், தந்தை என்றும், அரசன் என்றும், தலைவன் என்றும், பிணிதீர்க்கும் மருத்துவன் என்றும், அறியாமை நீக்கும் ஆசிரியன் என்றும் பல்வகை நிலைகளில் இறைவனைப் போற்றுகின்ற வழிபாடு எமது சமயத்தில் காணப்படுகின்றது. அவ்வாறு இறைவனை சமய குரவர்களும் மெஞ்ஞானிகளும் அப்பனாக அம்மையாக தோழனாக குருவாக எல்லாம் வழிபட்டு பேரானந்தப் பெருவாழ்வு அடைந்திருக் கின்றார்கள் என்பது சமய வரலாறு எமக்குத் தெரிவிக்கம் செய்தியாகும்.

சொல்லித் தெரிய வைக்கும் முறை ஒன்று சொல்லாமல் புரிய வைக்கும் முறை மற்றது. அவ்வாறு சொல்லாமல் விளங்கவைக்கும் முறையின் தத்துவமாய் அமைந்தவர் தட்சணாமூர்த்தியாவார். சனகாதி முனிவர்கட்கு சின்முத்திரையை காட்டி மௌனமாக வீராசனமிட்டு அமர்ந்து சொல்லாமல் தத்துவத்தினை புரிய வைத்தவர் ஆவார். இதனை திருவிளையாடற் புராணம்;

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்தனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

என வரும் பாடலால் விளக்கமாகச் சொல்லி யிருப்பதைக் காணலாம். இவ்வாறு ப்ரம்மஞானத்தினை உணர்த்த குருவடிவாக எழுந்தருளிய வடிவம் தட்சணா மூர்த்தி வடிவமாகும்.

தட்சணா மூர்த்தி வீற்றிருக்கும் நிலை குருவடிவமாகும். இதனை அவர் எழுந்தருளியிருக்கும் நிலையைப் பார்த்து நாமே உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இவர் கலைகளுக்கு உறைவிடமானவர். யோகம் ஞானம் முதலியவற்றிற்கும் இருப்பிடமானவர். இவரது அருளின் விளைவே அறுபத்தினாங்கு கலைகள் ஆகும். இவற்றுள் யோகம், சங்கீதம் இரண்டும் இவரிடம் இருந்து நாம் நேரடியாகவே உபாசிப்பதன் மூலம் சித்தி பெறலாம். குரு என்பவர் சிஷ்யனை அஞ்ஞானமாகிய இருளில் இருந்து மீட்பவராவார். அந்தவகையில் ஞான வடிவினனாய் இருந்து அறிவு பரப்பும் குருவாக விளங்குபவராக இருப்பவர் தட்சணா மூர்த்தி ஆவார். இவர் தன்னை நாடி வந்து துதிப்பவர்கள் துன்பம் துடைத்து பரம சாந்தியை அளிக்கின்றார். இவர் ஆலமரத்தின் கீழ் வீற்றிருக்கின்றார் என்பது புராண வரலாறு. மனிதர் உண்ணுவதற்கு பயன்படாத பழத்துடன் இருந்தாலும் ஆலமரம் எப்படி பல நூறு விழுதுகளை விட்டு பல்கிப் படர்ந்து அழியாமல் நிலை பெற்று நிற்கிறதோ அப்படி வளர்ந்து பெருகும் நிலையைக் குறிக்கவே ஆலமரத்தின் கீழ் அமர்ந்தார் தட்சணா மூர்த்தி என கூறப்படுகின்றது.

ஆலமரம் பிரபஞ்ச தத்துவத்தினை உணர்த்துவது. அதாவது மனித மனம் ஆசையின் பாற்பட்டு சம்சாரம் என்னும் பந்தமாகிய மரத்தின் மீதேறி அல்லற்பட்டு தவறி கீழே விழ நேரும் பொழுது அங்கே தடுத்தாட்கொள்ளும் பரமதயாநிதியாய் பரமன் மரத்தின் அடியில் வீற்றிருந்து பாதுகாத்தருள்கிறார் என்பதே இதன் தத்துவமாகும்.

மேலும் பரஞானத்தினை அடைவதற்கு உலக வாழ்க்கை உதவுதல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. பரஞானத்தினை அடைவதே வாழ்வின் இலட்சியம். அது வாழ்வின் வெற்றியாகும். நீரானது அருவியாக ஊற்றெடுத்து, ஆறாக பாய்ந்தோடி, சமுத்திரத்தில் சங்கமிப்பது போன்று, உலக வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் மக்களை படிப்படியாக பேரானந்த நிலையான சாலோகம், சமீபம், சாரூபம் சாயுச்சியம் என்னும் முக்திப் பேற்றுக்குள் திகழ்த்தச்செய்தலே ஆகும். இவ்வாறான ஒப்பற்ற

முத்திப் பேற்றினை அடைய சிறந்த அருள் வடிவமே தட்சணா மூர்த்திவடிவமாகும். ஆலமரமான பிரபஞ்ச வாழ்வில் இருந்து குரு வடிவான தட்சணாமூர்த்தியின் அருளால் விடுபட்டு இறையின்பம் அடைதல் என்னும் தத்துவ வடிவமே தட்சணா மூர்த்தி வடிவமாகும்.

## தட்சணா மூர்த்தி பேதங்கள்

தட்சணா மூர்த்தி அவர் அருளுகின்ற யோகம், நுண்கலை, ஞானம், சாஸ்திரம், முதலியவற்றின் பாங்கினால் நான்கு வடிவமாகத் திகழ்கின்றார் என கூறப்படுகின்றது. யோக தட்சணா மூர்த்தி, வீணா தட்சணா மூர்த்தி, ஞான தட்சணா மூர்த்தி, வியாக்கியான தட்சணா மூர்த்தி என அவர் நான்கு பேதங்களாக திகழ்கின்றன. வியாக்கியான தட்சணா மூர்த்தி பகவானே பெரும்பாலும் ஆலயங்களில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

## வியாக்கியான தட்சணா மூர்த்தி

வியாக்கியான தட்சணா மூர்த்தி இமயமலையில் கல்லால மரத்தின் கீழ் புலித்தோலால் ஆசனத்தின் மீது அமர்ந்திருப்பவரா வார். இவர் வலது கால் கீழே தொங்கவும் இடது கால் மடித்து வலது கால் தொடையின் மீது பொருந்தும் வண்ணம் அமர்ந்திருக்கின்றதாகிய வீராசனம் இட்டுக் காணப்படுவார். இவர் பத்மாசனத்திலும் இருப்பவராகவும் கூறப்படுகின்றது. இவர் தனது தொங்கும் காலினால் அபஸ்மாரபுருஸனை மிதித்தவாறு அமர்ந்துதிருப்பதைக் காணலாம். சூரிய சந்திர அக்கினிகளைக் கண்களாக்கொண்டு காட்சிதரும் இவருக்கு நான்கு திருக்கரங்கள் உண்டு. முன்னுள்ள வலது திருக்கரம் ஞானமுத்திரையாகிய சின்முத்திரையைக் காட்டி நிற்கின்றது. முன்னுள்ள இடது திருக்கரம் வரத கரமாக அல்லது தொங்கும் திருக்கரமான தண்டகஸ்தமாகவும் காணப்படும். வரதகஸ்தம் அல்லது தண்டகஸ்தமானது முழந்தாளில் பொருந்தியதாகக் காணப்படும். பின்னுள்ள திருக்கரங்களில் வலது கரத்தில் அக்சமாலையும் இடது கையில் அக்கினி அல்லது

சர்ப்பத்தையோ தாங்கியவாறு அமைந்திருப்பதைக் காணலாம். இவர் அமர்ந்திருக்கும் நிலை யோக நிலையாகும். அதாவது உடல் சிறிதேனும் வளைந்திராது நிமிர்ந்து காணப்படும். ஆழ்ந்த கருத்துக்களையும் குருவடிவாய் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு பெரும் சக்தியைக் குறிப்பதாகவும் இன்நிலை காணப்படுகின்றது. மூலக்கனலான குண்டலினி சக்தியை சிவராஜ யோகத்தால் புரவங்களின் மத்தியில் ஏற்றினால் என்றும் இளமையோடு நோயின்றி விளங்க முடியும் என்பதை விளக்கும் வகையில் இவர் என்றும் இளமைத் தோற்றத்துடன் காட்சி தருகின்றார்.

தட்சணா மூர்த்தியின் சின்முத்திரையில் உள்ள கட்டை விரல் பதியாகிய இறைவனைக் குறிப்பிடுகின்றது. ஆள்காட்டி விரல் பசுவாகிய உயிரைக் குறிப்பிடுகிறது. ஆள்காட்டிவிரலை அடுத்துள்ள மூன்று விரல்களும் மும்மலங்கள் என்று சொல்லப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றினை உணர்த்துகின்றன. பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனைச் சென்றடைய வேண்டும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் பதியைப் பசு நெருங்க விடாமல்வைத்திருக் கின்றன. அதாவது இறைவனை அடையவொட்டாமல் உயிரை மும்மலங்கள் மறைத்து இருக்கின்றன.

மனிதன் பொதுவாக நல்லனவற்றில் இருந்து விலகித் தீயனவற்றின் பக்கம் தான் இருப்பான் இதுதான் பசுவாகிய ஆழ்காட்டி விரல் பதியை விட்டு விலகி இருப்பதோடு மும்மலங்களின் பக்கத்திலும் இருக்கின்றது. பசு மலங்களின் பக்கத்திலும், மலங்கள் பசுவின் பக்கத்திலும் இருக்கின்றன. பசு எனப்படும் ஜீவர்களாகிய நாம் பதியாகிய இறைவனைச் சென்றவ்வதையே நோக்கமாக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை காட்டும் உயரிய தத்துவச் சின்னமே சின்முத்திரை யாகும்.

பளிங்கு நிறத்திரு மேனியை உடைய இவரது தலையை கங்காதேவி பிறைச்சந்திரன் கபாலம் முதலியன அலங்கரம் செய்ய இவரது சடை சடாமகுடமாக அல்லது சடாபாரமாக

அல்லது சடாமண்டலமாக அல்லது சடாபந்தமாகக் காட்சி தருவதைக் காணலாம்.

இவரது பார்வையும் மேலான தத்துவத்தினை உணர்த்துவதாகும். அதாவது சிறிதேனும் சலனமின்றிக் காணப்படும் இவரது கண்கள் மூக்கின் நுனியிற் பதிந்தவாறு காணப்படும். பார்வையானது கைகட்டை விரலில் பதிந்தவாறு காணப்படும். இது தியான நிலையின் உச்சநிலையாகும்.

தட்சணா மூர்த்தி குருவடிவினர் ஆவார் அதனால் இவரை சூழ நாரதர், ஐமதக்கினி, வசிட்டர், பிருகு, பரத்வாசர், அகத்தியர், சனகர் முதலியோர் அமர்ந்திருந்து அருள்ஞானம் பெறுவதைக் காணலாம்.

## ஞானதட்சணா மூர்த்தி வடிவமும் ஏனைய தட்சணா மூர்த்தி வடிவங்களும்.

ஞானதட்சணா மூர்த்தி வடிவம் பெரும்பாலும் வியாக்கி யான தட்சணா மூர்த்தியின் வடிவத்தினை ஒத்திருப்பதைக் காணலாம். யோக தட்சணா மூர்த்தி வடிவமானது ஸ்வஸ்திகாசனமாகவும், உத்குடிகாசனமாகவும், மற்றும் இருகால்களையும் குத்திட்டும் மாறுபட்டு அமைய வீற்றிருப்பதாகவும் என மூன்று நிலைகளில் அருள்வடிவாக வீற்றிருப்பதைக் காணலாம். காரணாகமம், அம்சுமத்பேதாகமம் வீணா தட்சணா மூர்த்தி திருவுருவத்தினைப் பற்றி சிறப்பாகக் காட்டுகின்றது. வீணையைத் தாங்கியவாறு வியாக்கியான தட்சணா மூர்த்தியின் வடிவோடு ஒட்டியதாக சங்கீதம் வீணை முதலியவற்றின் அறிவு புகட்டும் கலைத் தெய்வமாகப் போற்றப்படுகின்றார்.

## தட்சணாமூர்த்தி பகவானின் சில விஷேட அம்சங்கள்

தட்சணா மூர்த்தி திருவுருவங்கள் பற்றி ஆகமங்கள் 35 வரை சொல்லப்பட்டிருப் பதாக அறிகின்றோம். ஆவற்றில் சில விதானங்களே ஆலயங்களில் உள்ளன. பெரிய ராஜகோபுரங்

களின் தென்திசையில் சிலவகை தட்சணா மூர்த்தி விதானங்கள் சுதை வடிவங்களில் காணலாம். மிகச் சில கோவில்களில் உற்சவ மூர்த்தியாகவும் காண முடிகின்றது. மயிலாடுதுறை, ஓமாம்புலியூர், ஆலங்குடி, மங்கைமடம் ஆகிய திருக்கோவில் களில் களில் உற்சவராக அருள்தருகின்றார்.

தட்சணா மூர்த்தி ஒரு சில ஆலயங்களில் வீற்றிருந்து சில விஷேட அருட் செயல்களைச் செய்தருளியுள்ளார்.

திருகொருக்கை என்னும் திருக்கோயிலில் மன்மத சம்ஹாரம் செய்தருளியுள்ளார்.

ஆவடையார் திருக்கோயிலில் மாணிக்கவாசகருக்கு குருந்த மரத்தடியில் ஞான உபதேசம் செய்தருளியுள்ளார்.

ஓம் ஆம் புலியூர் ப்ரணவ வியாக்கிர புரத்தில் அம்பாளுக்கு பிரணவம் உபதேசம் செய்தருளியுள்ளார்.

திருவிடமருதூர் ஆலங்குடியில் மத்யார்ஜுனம் என்ற பெயருடன் தென்திசையில் அமர்தருள் செய்தருளியுள்ளார்.

உத்திரமாயூரத்தில் ஸ்ரீ மேதா தட்சணா மூர்த்தியாக ரிஷப தேவர் கர்வம் அடக்கி உபதேசம் செய்தருளியுள்ளார்.

திருவாரூர் திருத்தலத்தில் கோஷ்டம் தவிர தனிக் கோயிலாக எழுந்தருளி யுள்ளார்.

திருப்புறமயம் திருக்கோவிலின் புறத்தே ஒரு விறகு வெட்டிக்கு காட்சி கொடுத்தருளியுள்ளார்.

இவ்வாறு தட்சணா மூர்த்தியானவர் பற்பல இடங்களில் பல திருவருட் செயல்களை செய்து குரு வாக எழுந்தருளி இருப்பதைக் காணமுடிகின்றது. இவர் குருவிற்கு குருவாக விளங்குபவர் ஆவார். அதனால் தான் தேவ்குருவாகிய வியாழபகவானின் அருள்வேண்டுபவர்கள் இவரை வழிபாடாற்றுகின்றார்கள். ஞானம், யோகம் சித்திக்கவும், இசைஞானம் கலையருள் கைவரப் பெறவும் வாழ்வில் மன அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கவும் நல்ல ஆசான்களின் (குரு அல்லது ஆசிரியர்கள்) வழிகாட்டல் கிடைக்கவும், மனித குலத்தின் விழுமிய பெரும் செல்வமாக விளங்கும் சிந்தனைத்

திறன், சிந்தித்து உணர்வதனால் விளையும் தெளிவு நலம், ஆகியவற்றின் நலனுக்காகவும் தட்சணா மூர்த்தி வழிபாடு எல்லோராலும் செய்யப்படுகின்றது. எனவே இகபர சுகங்கள் பெற்று நல்வாழ்வு வாழ தட்சணா மூர்த்தி பகவானை தொழுது பணிவோமாக.

## குருவாக அருளும் தட்சணா மூர்த்தி

நீரானது மலை உச்சியில் இருந்து பிறந்து அது பல மலைகள் பள்ளத்தாக்குகள் என எல்லாவற்றினையும் தாண்டி தனது சமுத்திரம் நோக்கிய பாதையின் வேகத்தில் இருந்து தளர்ந்து விடாது தனது பயணத்தினை மேற் கொண்டு சமுத்திரத்தில் சங்கமித்துக் கொள்கின்றது. அதே போன்று ஆன்மாக்களாகிய நாமும் பிறந்த பயன் அடைய உலகியலில் பல மாயைகள் துன்பங்களைச் சந்தித்தாலும் இறுதியில் இறைத்துவம் என்னும் சமுத்திரத்தில் சங்கமித்துக் கொள்ளல் வேண்டும். இதுவே வாழ்வின் இலட்சியமாகும். எம்மை உலகிற்கு ஈன்ற தாய் எமக்கு தந்தையை தெரியப்படுத்து கின்றாள். இதன் மூலம் தாயானவள் உணர்வியல் வாழ்வில் குருவாக திகழ்கின்றாள். தந்தையானவர் எமக்கு அக இருளைப் போக்கும் குருவிடம் அழைத்துச் செல்லுகின்றார். இதன் மூலம் தந்தை உலகியல் வாழ்வில் குருவாகத் திகழ்கின்றார். குருவானவர் அக நோயைப் போக்கி ஒளி புகச் செய்து ஞானம் என்னும் பாலூட்டி கடவுளை அடைய வழிகாட்டுகின்றார். இதன் மூலம் குருவானவர் உளவியல் வாழ்வில் குருவே கடவுளாகக் காட்ச்சி தருகின்றார். இதன் மூலம் எமக்கு வாழ்வில் எச்சந்தர்பத்திலும் உணர்வியல் ரீதியாகவும் சரி, உலகியல் ரீதியாகவும் சரி, உளவியல் ரீதியாகவும் சரி ஒரு குருவினுடைய வழிகாட்டல் அவசியம் என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

குருவானவர் இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட பிறவிப் பெருற் கடலைக் கடக்கவுதவும் பாய்மரக் கப்பல் போன்றும், பாவ நதியைக் கடக்க உதவும் படகு போன்றும், எதிர்காலத்தினை உரைத்து நிகழ்காலத்தினைக் காட்டும் கண்ணாடியைப் போன்றும் அஞ்ஞானிகளின் எதிரியாகவும் ஞானிகளின் தலைவனாகவும் காணப் படுகின்றவர் குரு ஆவார்.

புனிதனாகப் பிறக்கின்ற மனிதன் உலகியல் வாழ்வினால் மாசடைகின்றான். அவனை ஆணவம், கன்மம், மாயை முதலான அழுக்குகள் பற்றுகின்றன. இதனால் அவன் பிறவிப் பெருங்கடலை தாண்ட முடியாது தத்தளிக்கின்றான். உலகியல் வாழ்வில் நெருப்பானது புகையினாலும், கண்ணாடி தூசினாலும், சிசு கருப்பையினாலும் மூடப்பட்டு இருப்பது போன்று மனிதனுடைய ஞானம் ஆசையினால் மூடப்பட்டிருக் கின்றது.

ஆசைகள் மூன்று வகை. ஒன்று சாத்வீக குணமுடையது. புகைத்துக் கொண்டிருக்கும் தீயின் மீது சிறிது ஊதினால், அல்லது காற்று வீசினால் அது பிரகாசமாக எரியும். அதேபோன்று சாத்வீக குண ஆசையை சிறிது விவேகம் என்னும் காற்றினால் ஊதினால் போதும் ஆத்ம சொரூபம் பிரகாசிக்கும்.

இரண்டாவது வகை ரஜோ குணமுடையது. கண்ணாடியில் படிந்துள்ள தூசி அல்லது அழுக்குப் போன்றது. இதனை காற்று வீசினாலோ அல்லது ஊதினாலே போகாது. சற்று முயற்ச்சி செய்து துணி கொண்டு துடைத்துக் கொள்வதன் மூலம் அழுக்கு அகன்று விடுகின்றது. அதே போன்று தான் ரஜோ குணத்து ஆசைகளும் சற்று முயற்ச்சி செய்து கொள்வதன் மூலம் ஆத்ம சொரூபத்தினை பிரகாசிக்கச் செய்லாம்.

அடுத்து மூன்றாவது ஆசை தமோ குணம் ஆகும். கருப்பையில் இருக்கும் சிசுவைப் போன்றது. அது காலம் வரும் போது ஜனனிப்பது போன்று காலமும் மார்க்கமும் கை கூடும் போது தமோ குணத்தினை வெற்றி கொண்டு ஆத்ம சொரூபத்தினை ஒளிரச் செய்யலாம்.

இவ்வாறு காணப்படும் மூவகை ஆசைகளையெல்லாம் வெல்வதற்கு ஒரு வழிகாட்டி அவசியாமாகும். அவ்வாறு வாழ்வின் வெற்றிக்கு வழிகாட்டுபவரே குரு ஆவார்.

உலகம் மாயை ஆகும். வாழ்வு ஒரு நீர் குமிழி, மேகம் சூரியனை மறைப்பது போன்று மாயை கடவுளை மறைக்கின்றது. மேகம் விலக சூரிய ஒளி கிடைப்பது போன்று மாயை விலக இறையருளும் கிடைக்கும். ஆனால் எமது மனம் குரங்கி னைப் போன்றது ஆசையைப் பற்றி இறுக்கப் பிடித்துக் கொண்டு உலகியலில் தத்தளிக்கின்றது. மேகம் விலகி சூரிய ஒளி

கிடைத்தாலும், கருவில் இருந்து காலத்தே சிசு பிறந்தாலும் எம் ஆசைகளை நாம் விட மாட்டோம், காலத்தின் பலனால் ஆசைகளில் இருந்து விடுபட்டாலும், ஆசைகள் விடுபட விடுபட மென்மேலும் இறுக்கப் பற்றி பிடித்துக்கொள்வோம். மர உச்சிக்கு ஏறுபவன் கீழே விழுந்து கொள்ளாது மரத்தினை இறுக்கப் பிடித்துக் கொண்டு மரம் ஏறுவது போன்று ஆசையை விடாது மென் மேலும் பாவத்தின் மீது ஏறிக்கொண்டிருப்போம். உபாயம் சொல்லும் குருவினையும் நாட மாட்டோம். இதனை எல்லாம் வெற்றி கொள்வதற்கு ஸ்ரீ தட்சணா மூர்த்தியின் அருள் ஒன்றே எமக்கு மருந்தாகும். முத்திக்கு வித்தாகும் மூல குருவாக விளங்கும் தட்சணா மூர்த்தியின் தாள் பணிந்து போற்றிடுவோமாக.

## தட்சணாமூர்த்தி உபநிஷத்தில் இருந்து

சௌனகர் முதலிய மகரிஷிகள் சிரஞ்சீவியான மார்க்கண்டேய மகரிஷியை அணுகி நீங்கள் எவற்றால் சிரஞ்ஜீவியாகவும் ஆனந்தானுபவம் உடையவர்களாகவும் விளங்குகிறீர்கள் என்று வினவினார்கள். ஆதற்கு மார்க்கண்டேய மகரிஷி பதில் கூறும் வகையில் தட்சணா மூர்த்தியின் திருக்கோலக் காட்சியை பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

ஸ்படிகம் போன்ற வெண்மையானவரும், கைகளில் முத்தாலான அக்ச மாலை, வித்யாஸ்வரூபிணியான அமிருதகலசம், ஞானமுத்திரை ஆகியவற்றைத் தரிப்பவரும், ஸர்ப்பத்தை உடலைச் சுற்றி அணிந்துகொண்டிருப்பவரும், சந்திரனை சூடிக் கொண்டிருப்பவரும், முக்கண்ணரும், பலவித பூஷணங்களுடையவருமாகிய தட்சணா மூர்த்தியினைப் போற்றுகின்றேன்.

மங்களங்களையருளும் அபய முத்திரையும், மானும், பரசும் ஒரு கையை முழந்தாள் மேல் வைத்தும், கயிறு போல் உடலில் பாம்பைச் சுற்றிக்கொண்டு, சடையில் சந்திரனை தரித்து, பால் போல் வெண்ணிறத்துடன் பிரகாசிப்பவரும், ஆலமரத்தடியில் வீற்றிருப்பவருமான சுகர் முதலிய முனிவர் களால் சூழப் பெற்றவருமான முக்கண்ணர், ஆதிபரமேஸ்வரர் நமக்குப் பரிசுத்தமான பாவனையை அருளட்டும்.

விபூதிப் பூச்சினால் வெண்மையாக விளங்கும் திருமேனி யுடன் சந்திரகலையைச் சிரசில் தரித்துக் கரகமலங்களில் ஞானமுத்திரை, அக்ஷசமாலை, வீணை, புஸ்தகம், ஆகிய வற்றை ஏந்தி ஸர்பாபரணம்மும், யானைத் தோலாடையும், அணிந்து யோக பட்டாபிராமனாக வியாக்கியான பீடத்தில் எழுந்தருளிச் சிறந்த முனிவர்களால் எப்போதும் சேவிக்கப் பெற்று விளங்கும் ஈசன் தட்சணா மூர்த்தியே நம்மை எப்பொழுதும் காத்தருளட்டும் என தட்சணா மூர்த்தியின் திருக்கோலக்காட்சி பற்றிக் கூறினார்.



## ② பூதலத்தோர் போற்றும் வியாழபகவான்

பிரம்மபுத்திரரில் அங்கிரா என்பவருக்கு ஆங்கீரதன் என்னும் பெயருடைய முனிவர் பிள்ளையாக பிறந்தார். அவர் காசியில் ஒரு சிவலிங்கம் அமைத்து அரியதவத்தினை மேற்கொண்டார். பத்தாயிரம் தேவவருடங்கள் தவம் செய்த ஆங்கிரத முனிவர் முன் சிவபெருமான் தோன்றினார். "மேலான தவத்தைத் மேற்கொண்டமையால் உன்னை சிவன் என்றே எவரும் போற்றுவாராக. உன்னால் பூஜிக்கப்பட்ட சிவலிங்கத்தை வணங்குபவர் மலர் கொண்டு அர்ச்சிப்பவர் விவேகமும், மனத்தெளிவும், நல்லறிவும் பெறுவர். சுவர்க்கத்தில் உள்ள தேவர்களுக்கெல்லாம் குருவாக விளங்கும் சிறப்பும் அமைவதாக" என்று அருளிச் சிவபெருமானே அந்த அங்கிரதருக்கு முடிசூட்டியருளினார். அப்போது தேவர்கள் எல்லாம் அவரை வணங்கித் தமக்கு குருவாக ஏற்றுக் கொண்டனர். அந்த அங்கிரத முனிவரே வியாழபகவானாவர். அவருக்கு வியாழ உலகத்திற் தலைமையும் சிவனருளாலே கிடைத்தது.

இறவாப்பேறு தரும் நாராயண கவச மந்திரத்தை தேவர்களுக்கு உபதேசம் செய்தவர் தேவகுருவான பிரகஸ்பதியாகும். ஏனைய கிரகங்களை விட பலமுள்ள கிரகமாகத்திகழும் இவர் அறிவில் மேம்பட்டவராகவும் திகழ்கின்றார்.

| | | |
|---|---|---|
| திசை | - | வடக்கு |
| நிறம் | - | மஞ்சள் , பொன் நிறம் |
| ஜாதி | - | அந்தணர் |
| வடிவம் | - | உயரமானவர் |
| அவயவ ஸ்தானம் | - | இருதயம் |
| லோகம் | - | பொன் |
| ரத்தினம் | - | புஷ்பராகம் |
| பாஷைகள் | - | சமஸ்கிருதம் |
| வாகனம் | - | யானை |
| சுபாவம் | - | சாத்வீகம் |
| சுவை | - | தித்திப்பு |

ராசியில் தங்கி இருக்கும் காலம் - ஒரு வருடம்

| | | |
|---|---|---|
| புஷ்பம் | - | முல்லை, மஞ்சள் நிறப் பூக்கள் |
| தானியம் | - | கடலை |
| வஸ்திரம் | - | பொன், மஞ்சள் நிறப் பட்டு, பொன்நிறப் பட்டு |
| சமித்து | - | அரசு |
| அன்னம் | - | தயிர் அன்னம் |
| அதிதேவதை | - | தட்சணாமூர்த்தி |
| ராசி | - | தனு, மீனம் |



## 3 குருபகவானின் விஷேட சோதிட இயல்புகள்

குருபகவானை சோதிடத்தில் புத்திரகாரகன் என்று அழைப்பார்கள். ஒருவருடைய புதல்வர்கள் அல்லது புதல்வியரைப்பற்றி நாம் குருவின் நிலையை வைத்துத் தான் அறிநது கொள்ள முடியும். அத்துடன் ஒருவருடைய தயாள குணம், நுண்ணறிவு, செல்வப் பெருக்கு, உடல் வளர்ச்சி, வலக்காது, கல்லீரல், இரத்தக் கோளாறுகள், ஆகிய இவற்றையெல்லாங் கூட நாம் குருவைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள வேண்டும். சட்ட நிபுணர்கள், மதகுருமார்கள், ஆசிரியர்கள், பலசரக்கு வியாபாரிகள், கொடுக்கல் வாங்கல் தொழில் செய்பவர்கள், ஆகிய இவர்களுக்கெல்லாம் குருபகவானே அதிபதியாவார்.

ஞானம், யோகாப்பியாசம், அஷ்டமாசித்திகள், உபதேசம், விவகார ஆலோசனைகள், இராச்சியாதிபத்தியம், குடும்பம், அரசசேவை, தனம், ஒழுக்கம், பிரபல்யம், இரசசன்மானம், பட்டப்பெயர்கள், சாந்தம் இவைகளுக்கும் குருபகவானே அதிபதியாகும்.

நவநாயகர்களில் முக்கியமான இடத்தினை வகிக்கும் குரு பகவான் ஒரு ராசியில் தங்கியிருக்கும் காலம் ஒருவருடம் ஆகும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் குரு பெயர்ச்சியடையும் போது சில ராசிகளுக்கு நன்மையான பலன்களையும், சில ராசிகளுக்கு தீமையான பலன்களையும் கொடுப்பார் என்று சோதிட சாஸ்திரங்கள் கூறியிருப்பதைக் காணலாம். குருப்

பெயர்ச்சி யாருக்குப் பாதகமாக இருக்கின்றதோ அந்த ராசிக்காரர்கள் பரிகாரம் செய்வது சிறப்பானதாகும். ஆகாயம் என்னும் பஞ்சபூதத்தின் தன்மையை பெற்றவர் குருபகவான். இவரைத் தொழுது வாழ்வினில் வெற்றியும் அமைதியும் பெற்று மகிழ்வோமாக.



ஸ்ரீ தட்சணாமூர்த்தி

# ④ குரு வழிபாடும் சகல தோஷ நிவர்த்தியும்

## பொதுவான வழிபாட்டு முறைகள்

குரு தோஷம் நிவர்த்தி அடைந்து அமைதியும் சுபீட்சமும் நலமும் வளமும் நிறைந்த நல் வாழ்விற்கு குரு மூர்த்தமாக திகழும் தட்சணாமூர்த்தியின் திருவடிகளையும் தேவகுருவாக விளங்கும் வியாழ பகவானின் திருவடிகளையும் என்றும் மனம், மொழி, மெய்யினால் சிந்தித்து வந்தித்து போற்றுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை எனலாம். அவ்வாறு மனம், மொழி, மெய்களினால் ஆற்றக்கூடிய பரிகார வழிபாடுகளை அறிந்துகொள்வது நலமாகும்.

குரு என்பவர் வித்யாகுரு, தீட்சாகுரு, ஞான குரு, லோககுரு, என பலவகைப்படும். பலவகை வித்தைகளை மாணாக்கர்களுக்கு கற்பிப்பவர் வித்யாகுரு ஆவார். பஞ்சாட்சரம், ஷடாட்சரம் ப்ரம்மோபதேஷம் முதலானவைகளை மாணாக்கரின் பக்குவ நிலைக்கேற்ப போதிப்பவர் தீட்சாகுரு ஆவார். உயர்ந்த ஞானம் பற்றி உபதேசிப்பவர் ஞானகுரு ஆவார். என்றென்றும் அழியாத பேரின்ப வாழ்வைப்பற்றியதான ஞானத்தினை போதித்து ஆன்மாக்களின் மல இருளைப் போக்கி பேரின்ப வாழ்வை அளிப்பவர் லோக குரு ஆவார். எல்லோருக்கும் மேலாக திகழும் பரமேஸ்வரனே லோக குருவாக தட்சணா மூர்த்தியாக அருள் பொலிவுதருகின்றார்.

குரு தோஷம் உள்ளவர்கள் தட்சணாமூர்த்தி பகவான், சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் செய்த யோகமார்க்க நெறிகளையும் இயன்றளவு கடைப்பிடிப்பதன்

மூலம் மனதினை வலிந்து இழுத்து ஒருநிலைப்படுத்தி இறையருள் வேண்டிப் பிரார்த்திப்பதற்கு ஒத்தாசை புரிகின்றது. எனவே அவைபற்றியதான கருத்துக்கள் பின்வருமாறு;

இறைவனை மகிழ்விப்பதன் மூலம் திருவருளை மிக எளிதில் பெற்று மகிழலாம். அதற்கு அவன் விரும்பும் செயல்களைச் நாம் செய்தல் வேண்டும்.

1) தட்சணா மூர்த்தி குரு பகவான் வழிபாட்டில் ஈடுபடுகின்றவர்கள் வியாழக்கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்கும் போது முதலில் மௌனமாக இருந்து வழிபாடாற்றுவது சிறப்பாக அமையும். தட்சணா மூர்த்திபகவான் மௌனமாக இருந்து முனிவர்களுக்கு அருள் வழிகாட்டியவர் ஆவார். மௌனம் என்பது தட்சணாமூர்த்திபகவானுக்கு பிடித்தமானதாகும். எனவே நாம் மௌனவிரதம் அனுஷ்டிப்பது மிகச் சிறப்பாகும்.

2) தட்சணாமூர்த்திபகவான் முனிவர்களின் மன ஒருமைப் பாட்டிற்கான இயமம் முதலான எட்டு உறுப்புக்களை போதித்தார். அவர் போதித்த அந்த மார்க்கங்களை நாமும் கடைப்பிடிப்பதன் மூலம் தோஷங்களில் இருந்து விடுபடலாம். அதாவது

**அ) இயமம் --- இது பத்து வகைப்படும்.**

1) கொல்லாமை - உயிர்களை மனம், வாக்கு, காயம் முதலியவற்றால் துன்புறுத்தாமல் இருத்தல்.

2) உண்மை - மனம், வாக்கு. காயத்தால் உண்மையாக இருத்தல்.

3) கள்ளாமை - பிறர் பொருளை மனத்தாலும் கவர நினையாமல் இருத்தல்.

4) காமம் - இன்மை காமவிகாரத்தைத் தடுத்து பிரம்மச் சரியம் காத்தல்.

5) பொறுமை - பிறர் தன்னை துன்புறிதினாலும் அவர்மீது வெகுளாமல் இருத்தல்.

6) உறுதியுடைமை - வரும் துன்பத்தினைக் கண்டு அஞ்சாது இருத்தல்.

7) தயை - எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருத்தல்.

8) நேர்மை - எலோரிடமும் வஞ்சகமில்லாமல் இருத்தல்.

9) அளவறிந்து உண்ணல் - அளவோடு உண்ணல்

10) தூய்மை -

அ) உடல் தூய்மை :-உடலை நீரினால் தூய்மைப்படுத்தல்.

ஆ) மனத் தூய்மை :-இறையன்பில் மூழ்குவதால் ஏற்படும்.

மனத் தூய்மை என்பது புண்ணியம் செய்பவர்களிடம் நட்புக்கொள்ளுவது, துன்பப்படுகின்றவர்களுக்கு தன்னால் இயன்ற உதவி புரிவது, இன்பம் அனுபவிக்கின்றவர்களைப் பார்த்தும் கேட்டும் தான் இன்பம் அனுபவிப்பது போல இன்பமாய் இருத்தல், தீமை செய்கின்றவர்களை திருத்த முயல்வது அது இயலாவிட்டால் அவர்களை நித்தனை செய்யாமல் இருத்தல்.

**ஆ) நியமம் – இது பத்துவகைப்படும்**

| | | |
|---|---|---|
| 1) தவம் | - | விரதம் இருத்தல், அவ்வேளைகளில் தியானம் இருத்தல். |
| 2) மகிழ்ச்சி | - | போதும் என்ற மனத்துடன் வாழ கற்றுக் கொள்ளல். |
| 3) ஆஸ்திக்யம் | - | இறை நம்பிக்கையிருத்தல், இறை சார்ந்த நூற்கள் படித்தல் |
| 4) தானம் | - | வறுமை உடையவர்களுக்கு தம்மால் இயன்ற உதவி புரிதல். |
| 5) சிவபூசை | - | எல்லாச் செயல்களையும் பலனை எதிர்பாராது சிவார்ப்பணமாக செய்தல் |

| | | |
|---|---|---|
| 6) சித்தாந் சிரவணம் | - | குருவினிடம் இருந்து சமய உண்மைகளை கேட்டறிதல் |
| 7) வெட்கம் | - | செய்யத்தகாத செயல்களை செய்ய நினைக்கும் போதே நாணமடைதல். |
| 8) நற்புத்தி | - | இறைவன் பற்றிச் சிந்தித்தல் |
| 9) ஜபம் | - | தெய்வத்திற்குரிய மந்திரத்தினை தொடர்ந்து செபித்தல். |
| 10) விரதம் | - | பிரம்மச்சாரி தன் மாணவ நிலைக்குரிய அறத்தனை செய்தல் இவ்வாறு இல்லறத்தான், வானப்பிரத்தன், சன்னியாசி ஆகியோரும் தத்தம் அறங்களை மேற்கொள்ளல். |

**இ) ஆசனம்**

உடலையும் உள்ளத்தினையும் கட்டுப்படுத்தி இறைவனைத் தியானிக்க ஆசனங்களை செய்தல். (யோகாசனம்)

**ஈ) பிராணாயாமம்**

இது மூச்சுப்பயிற்சியாகும், இப்பயிற்சியால் மன ஒருமைப்பாடு உண்டாவதுடன் ஆயுளையும் நீடிக்கும். இது இறைவனை ஒரு மனத்துடன் தியானிக்க பயனுள்ளதாகும்.

**உ) பிரத்தியாகாரம்**

மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஐம்பொறிகாளல் உணரப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றினை கட்டுப்படுத்தல்.

ஊ) தாரனை

மனத்தில் உள்ள எண்ணங்களை விலக்கி உடம்பில் உள்ள மூலாதரம் முதலிய இடங்களில் இறைவடிவத்தினை தோன்றச் செய்து ஆனந்தமடைதல். (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரதம், அநாகதம், விசுத்தி, அக்ஞை, அச்சத்ரகம்)

எ) தியானம்

புலன் வழி மனத்தினை செல்லவிடாது இறைவனை இடைவிடாது சிந்திப்பது தியானமாகும்.

ஏ) சமாதி

உயரிய நிலையாகும் இதன் வழி இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும். (சித்தர் யோகிகளின் இறுதிநிலை)

இயமம் முதல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உறுப்புக்களின் செயல்பாடுகளினாலும், பயிற்சியினாலும் சமாதி நிலை அடையப் படுவனவாகும். ஒவ்வொரு மக்களும் தங்கள் தங்கள் தகுதிப்பாட்டுக்கு ஏற்றால் போல் கடைப்பிடிப்பதன் மூலம் இறையருளை எளிதினிற் பெற்று மகிழலாம்.

1) குருதோஷம் உள்ளவர்கள் குருவாரமான வியாழக் கிழமைகளில் விரதம் அனுஷ்டித்தல் மேன்மையைத்தரும்.
2) காலையில் எழுந்து ஸ்நானம் செய்து நித்தியானுஷ்டானம் முடித்து சூரிய நமஸ்காரம் செய்து குருபகவானையும், தட்சணாமூர்த்திபகவானையும் நினைத்து பிரார்த்தனை செய்து வருதல் தோஷங்களை குறைத்துக் கொள்ளும்.
3) வியாழக்கிழமைகளில் சிவாலயதரிசனம் குறிப்பாக மஹாகுருவாகிய தட்சணா மூர்த்தி வியாழபகவான் தரிசனம் செய்துவந்தால் தோஷத்தினை குறைவடையச் செய்யலாம்.

4) மிகவும் கஷ்டமான தோஷகாலத்தில் தினசரி சிவாலய வழிபட்டினை மேற்கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடலாம். இதன் மூலம் சுகமும் சுபீட்சமும் உண்டாகும்.

5) வியாழபகவானை தமது சக்திக்கு தக்கவாறு குரு தோத்திரங்கள் பாடியவாறு 03, 09, 11, 21, 27, 35, 108 என பிரதட்சணம் செய்து வர தொடரும் துன்பத்தில் இருந்து விடுபட்டு மகிழ்வடையலாம்.

6) குருபகவானுக்கு முக்கூட்டெண்ணெய் (நெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணை மூன்றினையும் கலந்த எண்ணெய்) தீபம் ஏற்றிவழிபடல்.

7) கொண்டைக்கடலை, பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் முதலிய நிவேதித்து கடலையை ஆலயத்தில் விநியோகிப்பதன் மூலம் குருவை பிரீதியடையச் செய்யலாம்.

8) மல்லிகை, முல்லை மஞ்சள் நிறப் புஷ்பங்களால் குருபகவானையும், தட்சண மூர்த்த பகவானையும் அலங்கரித்து அர்ச்சித்து கூடம் ஏற்றி வழிபாடாற்றிவர தோஷம் நிவர்த்தியடையும்.

9) தட்சணாமூர்த்தி, குருபகவானுக்கு கடலை மாலை அணிந்து வணங்கி வர ஏற்படும் தோஷங்கள் குறைவடையும்.

10) கடலை தானியத்தினை தட்சனை தாம்பூலத்துடன் அந்தணர்க்கு தானமாக் கொடுதுக் கொள்வதன் மூலம் பிரீதியடையலாம்.

11) கடலை தானியம் சேர்ந்த உணவினை உணவில் சேர்த்து கொள்வதும் சிறப்பான பலனைத்தரும்.

12) தட்சணாமூர்த்தி பகவானுக்கு நெய் தீபம் ஏற்றி வைத்து வழிபாடாற்றிவர துன்பங்களும் பனிபோல் உருகி மறைந்து விடும்.

13) தட்சணாமூர்த்தி மற்றும்குரு பகவானுக்கு மஞ்சள் மா அபிஷேகம் செய்து வர தோஷங்கள் அகன்று நல்வாழ்வு கிடைக்கும்.

# 5 குருபகவான் தோஷம் அகல தட்சணாமூர்த்தி வழிபாடு

ஒவ்வொருத்தர்களும் தங்கள் தங்கள் ராசிகளை தெரிந்து தோஷம் உள்ள காலத்தில் கீழ்கண்டவாறு பரிகார பூஜை செய்து நற்பேறடையலாம்.

**மேடராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பன்னீர் சந்தன அபிஷேகம் செய்து சண்பகப் பூமாலை அணிவித்து மாதுளம்பழம் நிவேதித்து சிவனையும் பூஜித்து அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர தொடரும் துன்பங்கள் விலகிச்செல்லும்.

**இடப ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

இளநீர் அபிஷேகம் செய்து பட்டாடை வெண்தாமரையினால் அலங்கரித்து புளிச்சாதம் நிவேதித்து லட்சுமிதேவியையும் வழிபாடாற்றி வந்தால் கஷ்டங்கள் விலகி இன்பங்கள் கிடைக்கும்.

**மிதுன ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பன்னீர் அபிஷேகம் செய்து மல்லிகை மலர்மாலை பட்டாடை அலங்காரம் செய்து, கொய்யாப்பழம் நிவேதித்து விஷ்ணுவையும் பிரார்த்தித்து அர்ச்சனை வழிபாடு செய்து வர வளமான வாழ்வு கிட்டும்.

**கடக ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம்:**

பால் அபிஷேகம் செய்து, பட்டு, நந்தியாவட்டை மலர்மாலை அலங்காரம் செய்து, வாழைப்பழம் நிவேதித்து, அம்பாளையும் துதித்து அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர நலமும் வளமும் பெருகும்.

**சிம்ம ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பன்னீர் அபிஷேகம் செய்து, பட்டுடன் செந்தாமரை மலர் அலங்காரம் செய்து, ஆப்பிள் அல்லது விழாம்பழம் நிவேதித்து சிவனையும் பிரார்த்தித்து அர்ச்சனை வழிபாடுகள் செய்துவர சுபீட்சமான வாழ்வு மலரும்.

**கன்னி ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பன்னீர் அபிஷேகம் செய்வித்து, பட்டாடையுடன் வில்வம், வெண்காந்தள் மலர் மாலையும் அலங்கரித்து, நெல்லிக்காய் நிவேதித்து, துர்க்கையம்மனையும் துதித்து அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர அமைதியும் வாழ்வில் மேன்மையும் சித்திக்கும்.

**துலா ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

சந்தன அபிஷேகம் செய்து, பட்டாடையுடன் பவள மல்லிகை மலர் மாலை அலங்காரம் செய்து, மாம்பழம் நிவேதித்து, விஷ்ணுவையும் பிரார்த்தித்து அர்ச்சனை வழிபாடு செய்துவர சிறப்புடன் வாழ்வு அமையும்.

**விருச்சிக ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பால் அபிஷேகம் செய்து, பாட்டாடையுடன் ரோஜா மலர் மாலை அணிவித்து, விளாம்பழம், மாதுளம் பழம் நிவேதித்து, முருகனையும் பிரார்த்தித்து அர்ச்சனை வழிபாடு செய்துவர துன்பங்கள் அகன்று வாழ்வில் விடிவு கிடைக்கும்.

**தனு ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

பன்னீர் அபிஷேகம் செய்து, பட்டாடையுடன் முல்லை மலர் மாலை அலங்காரம் செய்து, தோடம்பழம் நிவேதித்து சிவன், விஷ்ணு தெய்வங்களையும் துதித்து, அர்ச்சனை வழிபாடு செய்து வர கஷ்டங்கள் விலகி நன்மைகள் கிட்டும்.

**மகர ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

வாசனைத் திரவிய அபிஷேகம் செய்து, பட்டாடையுடன் கருங்குவளை மலர் மாலை அலங்காரம் செய்து, இராசவள்ளிக்கிழங்கு நிவேதித்து, விநாயகரையும் தொழுது அர்ச்சனை வழிபாடு செய்து வர நலமெல்லாம் கூடி வரும்.

**கும்ப ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

தேன் அபிஷேகம் செய்து, பட்டாடையுடன் நீல நிற மலர் மாலை அணிவித்து, பலாப்பழம் நிவேதித்து, பைரவரையும் வணங்கி, அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர நலமிக நிறையும்.

**மீன ராசிக்குரியவர்கள் செய்ய வேண்டிய பரிகாரம் :**

மஞ்சள், பன்னீர் அபிஷேகம் செய்து, பட்டாடையுடன் மஞ்சள் அரளி மலர் மாலையும் அலங்கரித்து, தோடம்பழம் நிவேத்தித்து, சரஸ்வதிதேவியுடன் அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர மகிழ்வான வாழ்வு அமையும்.

**வறுமை நீங்கி நிறைவான செல்வம் கிடைக்க செய்யவேண்டிய பிரர்த்தனையும் பரிகாரம் :**

தட்சணாமூர்த்திக்கு வாசனைத்திரவியங்களால் அபிஷேகம் செய்து பட்டாடையுடன் தாமரை மலர் அலங்காரம் செய்து, ஆப்பிள் விளாம்பழம் முதலியன நிவேதித்து, தட்சணாமூர்த்தியுடன் லட்சுமிதேவி, பைரவர் ஆகியோரை அர்ச்சித்து வழிபாடாற்றி வர பொன்னும் பொருளும் தேடிவரும்.

**திருமணத்தடை நீங்கி திருமணம் நடைபெற செய்யவேண்டிய பிரர்த்தனை பரிகாரம் :**

தட்சணாமூர்த்திக்கு சந்தனம், பன்னீர், தேன் அபிஷேகம் செய்து பட்டாடையுடன் ரோஜாமலர் மாலையும் அலங்கரித்து, பழங்கள் நிவேதித்து, அர்ச்சனை வழிபாடுகள் ஆற்றிவர விரைவில் திருமணம் கைகூடும்.

**கட்டுப்பாடான வாழ்வு கிடைக்கவும், யோக சித்துக்கள் கிடைக்கவும், யோகாப்பியாசம், விளையாட்டுத்துறையில் ஈடுபடுவோர் முன்னேற்றம் பெறவும் :**

வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து யோக தட்சணாமூர்த்திபகவானை எண்ணி தட்சணாமூர்த்தி பகவானுக்கு பச்சைக் கற்பூரம் கலந்த நீரினால் அபிஷேகம் செய்து வெண்தாமரை மலரால் அர்ச்சனை செய்து தயிர்சாதம் நிவேதித்து வழிபட்டு வந்தால் பிறவித்துன்பம் அகலுவதோடு மனக்கட்டுப்பாடான வாழ்வு கிடைக்கின்றது, யோக சித்துக்களும் கிடைக்கின்றது. அத்துடன் குரு தோஷமும் அகலுகின்றது.

**கல்வியில் மேம்பாடு, பதவி உயர்வுகள், மன அமைதி, நினைத்த காரிய சித்தி, முதலியன உண்டாக :**

வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து தேன், சந்தனத்தால் அபிஷேகம் செய்து தயிர் சாதம், கடலை நிவேதித்து, வெண்தாமரை மலரால் அர்ச்சித்து வழிபட்டு வர கல்வியில் சிறப்பாக நினைத்த பாடப்பிரிவுகளில் சித்தியும் மற்றும் மேற்கூறிய நற்பலன்களும் கிடைத்து மகிழலாம்.

**சங்கீத விருத்தி, வாத்தியக்கலைகள் விருத்தி கலைஞர் வாழ்வு சிறப்படையவும் கலைஞர்ள் குரு தோஷம் நிவர்த்தி அடையவும் :**

வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து வீணாதார தட்சணாமுத்திபகவானை எண்ணி பண்ணிசையால் சங்கீதத்தாலும் வாத்தியக்கருவிகளாலும் இறைவனை மகிழ்வித்து போற்றி தேன் அபிஷேகம் செய்து தயிர் சாதம் நிவேதித்து, வெண்தாமரை மலரால் அர்ச்சித்து வழிபட்டு வர இசைஞானம் முதலியன விருத்தியாவதுடன் இத்துறைசார் கலைஞர்களின் வாழ்வும் மேன்மையுறும்.

**குழந்தை பாக்கியம் கிட்ட செய்யவேண்டிய பிரார்த்தனை பரிகாரம் :**

தட்சணாமூர்த்திக்கு பால் இளநீர் அபிஷேகம் செய்து பட்டாடையுடன் முல்லை மலர் மாலை அலங்காரம் செய்து, சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து குழந்தைகளுக்கு இனிப்புவகைகளுடன் விளையாட்டுப் பொருட்களும் தானமாக் கொடுத்தும் தட்சணாமூர்த்தி, குரு பகவானையும் அர்ச்சித்து வழிபாடாற்றி வந்தால் புத்திரபாக்கியம் கிடைத்து மகிழலாம்.

**தோல்வியாதி, சர்க்கரைவியாதி, மஞ்சள்காமாலை, சரீரம் தடித்தல், கொழுப்பால் வரும் நோய்கள், அஜீர்ணக் கோளாறுகள், காது நோய், ஈரல் கோளாறு, தொடைகளில் கட்டி, கைகால் வீக்கம், மர்ம உறுப்புக்களில் புண் போன்ற நோய்களிற்கு குருபகவானே காரணன் ஆவார். எனவே இத்தேஷங்களில் இருந்து ஆறுதல் அடைய செய்ய வேண்டிய பரிகாரம் :**

குரு வாரம் விரதம் இருந்து, தட்சணாமூர்த்திபகவானுக்கு மஞ்சள்மா, தயிர் முதலிய அபிஷேகம் செய்தல், வில்வ இலை மாலை, மரிக் கொழுந்து இலை மாலை மற்றும் முல்லை, நாகலிங்கபூ மாலைகள் அணிவித்தல், கொண்டக்கடலை அப்பிள் ஆரஞ்சு முதலியன நிவேதித்தல், குரு பகவான் தட்சணாமூர்த்தி ஆகியோருக்கு அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர தோஷம் அகன்று சுகவாழ்வு மகிழ்வோடு கிட்டும்.

**ஜென்ம குரு தோஷத்திற்கான பரிகாரம் (முலாம் இடம்):**

தட்சணாமூர்த்தி குரு முதலியோருக்கு பால் அபிஷேகம், சந்தன அலங்காரத்துடன் முல்லைப்பூ மாலையும் அணிவித்து செந்தாமரை மலர் சமர்ப்பித்தும், கடலை நிவேதிததும், அர்ச்சனையும் வழிபாடும் செய்து வர குருதோஷத்தில் இருந்து விடுபட்டு ஆனந்தமடையலாம்.

**மூன்றாம் இடத்தில் குரு இருக்கும் போது செய்யவேண்டிய பரிகாரம் :**

குரு தட்சணாமூர்த்திக்கு பன்னீர் அபிஷேகம் செய்து, கடலை மாலை, வெற்றிலை மாலை, முல்லை மாலை அணிந்து, கடலையும் நிவேத்தித்து, தாமரை மலரால்

அர்ச்சனை செய்வித்து வருவதுடன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்னமிட்டுவர சகல தோஷமும் அகன்று நிம்மதியான வாழ்வு கிட்டும்.

**எட்டாம் இடத்தில் குரு இருக்கும் போது செய்யவேண்டிய பரிகாரம் :**

குரு தட்சணாமூர்த்தி ஆகியோருக்கு பால் தயிர் அபிஷேகம் செய்து, வெற்றிலை முல்லை மாலைகள் அணிந்து, விஷேஷமாக எலுமிச்சம் பழத்தில் தீபம் ஏற்றி, தயிர்சாதம் அல்லது எலுமிச்சம்பழச்சாதம் நிவேதித்து, அர்ச்சனை வழிபாடுகள் செய்து வர எட்டாம் இடத்தில் இருந்து குரு பகவான் செய்து வரும் தோஷங்கள் நீங்கி நல்வாழ்வு நாடிவரும்.

**பத்தாம் இடத்தில் குரு இருக்கும் போது செய்ய வேண்டிய பரிகாரம்:**

குரு தட்சணாமூர்த்தி ஆகியோருக்கு மஞ்சள்மா அபிஷேகம் செய்து மரிக்கொழுந்து மாலை அணிவித்து, அன்னம் படையலிட்டு, அர்ச்சனை வழிபாடுகளுடன் அன்னதானமும் செய்து வர தொடரும் தோஷங்கள் அகன்று அமைதியும் ஆனந்தமும் கிட்டும்.

நான்காம்மிட குருவிற்கு ஜென்ம குருவிற்குரிய பரிகாம் செய்து வர தோஷம் அகலும்.

ஆறாம் இட குருவிற்கு மூன்றாம் இட குருவிற்குரிய பரிகாரங்கள் செய்து வர தோஷம் அகலும்.

பன்னிரண்டாம் குரு தோஷத்திற்கு எட்டாம் இட குருவிற்குரிய பரிகாரம் செய்து வர தோஷம் அகலும்.

## குருபகவான் அருளும் திருவருள் பேறுகள்

வேதம் ஓதல், புராண பிரசங்கம், உபதேசம், வக்கீல், ஆசிரியர், அரசவர்க்கம், யாத்திரை, கோவில், யோகாப்பியாசம், மஞ்சள் நிறம், வடக்குத்திசை, சுப காரியம், மகான்கள், சந்தோஷம், வைத்தியசாலைகள், அரச அலுவலகங்கள்,

கீர்த்தி, பழங்கள், வேள்ளி, கிராமாதிபத்தியம், தேசாதிபத்தியம், நம்பிக்கை, தாட்சண்யம், தெய்வபக்தி, உபகாரம், வாக்கு, தருமம், கற்பூரச்சுடர், எலுமிச்சம்பழம், அரசமரம், பொன், புஷ்பராகம், கடலை, சீரகம், கோரோசனை, பூர்வபுண்ணியம், ஆலமரம், இனிப்புப் பானங்கள் என இவை போன்ற அளவற்ற திருவருள் பேறுகளை குரு பகவான் அருள்வார்.

## திருவுருவப்பட தரிசன பலன்

குருபகவானை அவரது சக்தியாகிய தாராதேவியுடன் சேர்ந்து அருள்பாலிக்கும் திருவுருவப்படத்தினை உங்கள் அருகில் அல்லது அவர்பார்வை உங்கள் மீது படும்படியாக வைத்தால் அவரது பார்வை பட்டு குரு தோஷம் அகன்று சுகம் அடையலாம்.

தட்சணாமூர்த்திபகவான் சனகர் முதலான முனிவர் களோடு கூடி இருக்கும் திருவுருவப்படத்தினை உங்கள் எதிரில் மாட்டிவைத்து அவர்பார்வையில் நீங்கள் இருந்தால் தோஷகாலத்திலும் கூட கஷ்டங்கள் நீங்கி திருவருள் கிடைக்கும்.

## ஓம் தட்சணா மூர்த்தயே போற்றி

வேத நூல் தர்ம சாஸ்திரம்
மேன்மையை அறிந்தோனாகி
சாதனையால் கற்பகத்
தனினாட்டின் இறைவனாகி
சோதியாய் குருவுமாகி
சொர்க்கத்தை மண்ணில் நல்கும்
ஆதியாம் குருவே நின்தாள்
அடைக்கலம் போற்றி போற்றி.

**அடுத்து வரும் பகுதிகளில் வரும் திருமுறை முதலிய தோத்திரப் பாடல்களை மிகுந்த நம்பிக்கையுடன் அவரவர் தேவைக்கேற்ப பண் அறிந்தவர்கள் பண்ணுடன் இணைந்து தினந்தோறும் சிறப்பாக காலையில் பாராயணம் செய்துவர கோரிய பலனை நிச்சயம் பெற்று மகிழ்வீர்கள்.**

# (6) தட்சணாமூர்த்தி திருவருட்பா

தருமை ஆதீன 10வது குருமூர்த்திகள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளியது.

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா முடியும் அதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை இலங்கு காதும்
தேங்கு பரமானந்த சின்மயா காயமாம்
சித்தி அருண் முத்திரையுமேல்
சிவானுபவ நீங்கினோர் சேர அருள் செபமாலை
சிவஞான புத்தகமும் ஓர்
வேங்கையத ளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளம்என நிறைவடிவமும்
மேலான தெய்வம் நாம் அன்றி வேறில்லை இது
மெய்யென்று எடுத்த கனலும்
ஓங்கவட ஆலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

சீராரும் நின் சரண தேஜோம யானந்த
தெரிசனங் காட்டுபகலே
தேகாதியாகும் ப்ரபஞ்ச இருளாகியே
திண்டாடும் மும்மலப்பேய்
போராடுது என்னுடன் நான் ஏழை அத்துடன்

போராட முடிவதில்லை
புலையாடல் ஒரு நாள் இரண்டு நாளோ இது
பொறுக்கவும் படுவதில்லை
ஆரொடு சொல்லியென் குறை ஆறுவேன் எனக்கு
அன்னையே அப்பனே உன்
ஆறதலையன்றிவே றிலைநீ நழுவவிடின்
அடியேன் அலைந்து போவேன்
ஓராலின் நிழலில் உறைந்து சனகாதியர்க்கு
உள்ளபடி அருள் தெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

இரவிசதகோடிகள் இருட்டென்ன ஒளிவெயில்
எறிக்கும் ப்ரசண்டபானு
எண்ணிலாமதிவடவை என்னவேகுளிர்நிலா
எழுகின்ற சந்த்ரோதயம்
அரிபிரமர்இந்த்ராதி செல்வம் நல் குரவென்னும்
அளவிலாப் பெரிய செல்வம்
அண்டகோடிகளை அணுஎன்ற குணமேருகிரி
அமுதை வேம்பென்ற அமுதம்
பெரியபிரமப்பிரளயம் சிறியதுளிஎன்று
பேசுங் க்ரு பாம்புராசி
பிரபஞ்சமதனிலுள தெய்வம் எல்லாமும்
பிறந்தலையும் என நகைத்தே
உருவினில் அநாதியே உற்ற சித்ருபியாய்
உறைகின்ற பர தெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

தந்த்ரகலை அறிவனோ மந்த்ரகலை அறிவனோ
சாரும் உபதேசகலையில்
தந்தகயிலாச பாரம்பரியமாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ
அந்தரத்து உயர்மலைத் தேனினுக்கோர் முடவன்

ஆசைவைத்தது போலவே
ஐயனேநின்னருளை அடைவதற்காசைவைத்து
அடியன்முகம் வீங்கிநின்றேன்
சந்த்ரசேகர சகள நிட்கள தயாபர
சதாசிவ சிதாகாயமாம்
சபாநாத சுந்தரானந்த கல்யாணகுண
சர்வேச தேவ தேவே
உந்துந் தரங்கமெறி கங்காதரா கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

பொல்லாத பாவங்கள் கோடானுகோடியிப்
புவிமிசையி லோர் வடிவமாம்
புலையனேன் உனைமறந்தனுதினஞ்செய்துவரு
பொல்லாதவினை யெண்ணிலேன்
அல்லாருமலமாயை கருமங்கள் அணுகாத
அகளநிட்பிரபஞ்சமாம்
அகளங்கசுத்தநித்தியானந்த அனுபவம்
அணுவளவும் வந்ததில்லை
நல்லார் முனணுகாத யமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்காநின்ற துள்ளம்உனை நம்பினேன்
நம்பினேன் வடகயிலையாய்
உல்லாச பரமகுரு நாதனே ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

பெரிய பரமானந்த பரமசுகவாழ்விப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கையெலாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத் தாசையுஞ் சீயென்று விட்டெறிந்

தேகாந்த மாயிருந்தால்
இவ்வுலகிலிடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரியமறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவுந்
தீரத்துறந்திராத
சிறியனிவனென்றோ பராமுகம தாகவே
தேவரீர் நின்றசெய்தி
உரிய துறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒருதெய்வம் வேறில்லையே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

சரியைதனில் வல்லனோ கிரியைதனில் வல்லனோ
தகுயோக மதில்வல்லனோ
தவமதனில் வல்லனோ உபரதியில் வல்லனோ
தருபத்தி தனில் வல்லனோ
அரிபிரமர்காணா அகண்ட பூரணசச்சி
தானந்த சிவஞானமாம்
அதையுணர வல்லனோ ஆகாதபிரபஞ்சம்
அதையுணரும் வல்லமையிலே
பெரியனே ஆயினும் மேலான அனுபவம்
பெற்றவர்கள் போலிருந்து
பெருங்கபடநாடகம் நடிப்பேற்கும் நின்னருட்
பிரகாச மாகுமோசொல்
உரியபரமானந்த நிர்த்தனே வடகயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

மோகந்தரித்தவர்கள் மாதரைக்கூடியே
மோகந்தணிப்பரதுபோல்
முதுபசிதரித்தவர்கள் அன்னம்புசித்துலகில்
முதுபசி தணிப்பரதுபோல்
பாகந்தரித்தவர்கள் சற்குருவினோக்கப்

பயோதத்தி படிந்தேபிர
பஞ்ச வெப்பந் தணிப்பார்க ளென்றாகமம்
பலகலைகள் சொல்லவும்கேட்
டாகந்தரித்தமல வடவையாற் சூடுண்டுஎன்
ஐயனே நின்கடைக்கண்
ஆனந்த அருண்மழையின் மூழ்கவழிபாராமல்
அவமாக நாள்கழித்தேன்
ஊகங்கொடுத்தருளை அடையும்வழி அருளுவாய்
ஓங்கு குருபரநாதனே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்
பூதவிருள் தனைவிழுங்கும்
பூர்ணசந்த்ரோதயம் போலவும் சந்திரன்
பொன்னொளியை உள்விழுங்கும்
மன்னும் ஆயிரகோடி சூரியர்கள் போலவும்
வல்இரும் பினைவிழுங்கும்
மண்டுகனல்போலவும் உப்பினைவிழுங்கிடும்
வாரிநீரைப்போலவும்
என்னைநீ உள் விழுங்கிக்கொண்டு இருப்பது இனி
எக்காலம் எக்காலமென்று
ஏழையேன் அழுதழுதுவாடவும்திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே
உன்னருள் இரங்குநாள் எந்தநாள் ஆல்அடியில்
உறைகின்ற பரதெய்மே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

அண்டர்தொழுமிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித்தியும் விரும்பேன்
அகிலகலைஞானமும்விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த்தியும் விரும்பேன்
பண்டைமலம்எல்லாம் ஒழித்து நின்னருள்பெற்ற

பழைஅடியார்களடியார்
பாததாமரைகள் என்தலையின் மேல்வைத்தருட்
பார்வையால் இருள் அகற்றித்
தொண்டுசெய்தரிய பரமானந்தவெள்ளந்
துதைந்துவிளை யாடிஉலகந்
தோன்றாமல் இறுமாந் திருக்கின்றபெரு வாழ்வு
தொண்டனேன் வேண்டினேன்-வண்டு
உண்டிடுங்கொன்றையணி அண்டர் - நாயக கயிலை
உறைகின்ற பரதெய்மே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

**தட்சணா மூர்த்தி திரு வருட்பா முற்றிற்று.**



## 7 தட்சணாமூர்த்தி ஸ்துதி

அல்லல் என் செய்யும் அருவினை என் செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்ததான் என் செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே
வாய் திறவா மௌனம் வாயால் கூற முடியா
மெய் உறவான பரப்பிரம்ம சுயரூபம் காமன் தேடு
காளையுரு பரப்பிரம்ம நினைவில் ஆழ் முனிவர்
தாள் கண்டு கைதன் சின் முத்திரை புரி மகிழ்வில்.
மனம் போற்றி மறைகளாக்கி ஆனந்த உருக்கொண்ட
மனம் பேசும் பொருளின் ஆனந்த முகம் கண்டு
தன் உண்மை உருவில் இன்புற்று அதில் ஊறி
தண் முகத்தில் இன்பம் விளை ஆசானுள் அரியோன்.

தென்னாடு போற்றிடும் தென்திசைக் கடவுளை
என்னாடும் போற்றிட என்னிசையில் வணங்குவேனே.

ஆடியில் தோன்றும் நகர் போல் ஆன்மாவில் ஜகம் தோன்றும்
கோடியாய் காட்டிடு குரு மொழி ஆன்மாவை ஜகத்தில் காணும்
நித்திரையன்ன மாயை குரு நீக்க ஆன்மாவை ஜகமாகக் காணும்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

விதை விளையென படைத்தலுக்கு முன் யாவும் ஒன்றானது
கதையான மாயை இடக்காலக் கற்பனை வெவ்வேறானதே
இதையெவர் யோகி மாயாவியென நம்பிக் கையில் தோற்றுவிப்பாரோ
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

சத் அசத்தென்னும் பிரபஞ்சம் எவரொளியில் உண்மை கூறுமோ
பக்தியுடையார் பவமாயை நீக்கி நீ அதுவேவென வேதந்
தருசொல்லாய் மனந்தொட அவரையறிய இல்லற மில்லையோ
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

துளைமிகு குடத்துள் விளக்கு வெளிப் பொருட்கள் விளக்கும்
துளை நவங் கொள்ளுடலுறை உட்பொருள் யாவும் விளக்கும்
அதற்கு உட்பொருளாய் அறிவான அண்டம் நிறைப் பேரறிவே
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

பெண்டிரும் சிறுவரும் குருடரும் அறிவில் வாதிகளும்
தொண்டிடும் தேகமும் பிராணனும் புலன்களும் உயர்
சத்தென நினென மாயையின் மயக்கம் வேரறுத்திடும்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

புலன் மனது அடங்கியுறக் கதிர்மதி சூழ்நிழல் மறைச் சமயம்
புலனாகாதவை உரைவதே போல் புலனாகாதுறை ஆன்ம புருடன்
புத்துணர்வோடு விழிநிலையுணர் நினைவு தரு தன்னேரில்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

குழவிக் குமரக் கிழமெனப் பருவங்கள் மாறும்
நிலவு விழி கனவு பரநிலைகளில் உலவினும் உள் மாறாது
சத்தென நானென விளங்குருவை
சின்முத்திரையில் காட்டிடும்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

மாயைதரு மோகம்காரிய காரணம் உடைமை
தயை தரு மேலாளன் அரிய ஆசான் நல் கடமையுடை
புத்திரமாயைக் கன் என அகிலம் கண்டிடும் ஆண்மையின்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

உயிர் கொள் தாவரமுயிரில் பொருட்களென பரந்திடும்
உயரண்டம் நிலம் நீர் ஒளி வாயுவான் கதிர் மதியென வாகித்
திருவளர் மேல் ஆளெனவும் என்னுடலில் விரிந்துறையும்
அத்திரு குரு வடிவ திருதென் திசைக் கடவுளே இத்துதி ஏற்பாயே.

எண் வகை சித்திகள் தடையின்றி தானாய்த்தந்திடு தகைமைமிகு
எண் வகைத் துதியை இடையின்றி சிரவணமனை தியானமாக்க
அனைத்துள்ளும் ஆதியுமாய் அந்தமுமாய் நிறைப் பெருங்கருணை
அனைத்துள்ளும் நாளேயெனும் இறைத்தன்மை தந்திடுமே.

அமைதியாய் ஆலமரத்தருகே நிலமமர்ந்து நிட்டையாய்
அமர்ந்தினிதாய் அனைத்துமுனி கட்குஞான வட்டையை
அளித்திடுமீசனே மூவுலகக் குருவே பிறப்பிறப்புத் துன்பங்கள்
அறவேஒழித்திடு திருதென் திசைக் கடவுளே வணங்குவேனே.

எண்ணறு வியப்பே ஆலமரத்தடியில் அற்புதமே
நுண்ணறி நூலோர் முதிர் முனிகள் மாணவராம்
விண்ணறி குமரன் குரு உதிராச் சொற்கள் மானுடத்தத்துவம்
பண்ணாரி மௌனம் பரிந்துடுபோதம் நிறைந்திடு ஆனந்தம்.

ஆள்காட்டி கட்டைவிரல் நுனிகள் இணைய சின்முத்திரையால்
உள்காட்டி கட்டையென மானிடர்க்கு உபநிடதந் தருவான்
உள்ளுரை ஆன்மாவும்பரப் பிரம்மமும் ஒன்றானதென
தெள்ளிய அத்வைதம் சுட்டும் பரம சிவமே காக்கவே.

சிவமே பரமசிவமே பிரமசிவமே சதாசிவமே
கண்ணினில் கருணையலை காதினில் வேதஅலை
கருத்தினில் எண்ண அலை கையினில் ஓம் அலை
நெற்றியில் நீறு திருவலை தலையினில் அரவ அலை
சுற்றியதலை எழில் பேரலை அலை குழலில் பிறையழகே.

சுட்டியாய் சுடரலை அலையாப் புருவவளை
தட்டிடும் உடுக்கு அலை அதற்கொரு பூச்சரமலை
கண்டத்தில் விடம் கலை நாசியில் எக்கலையோ
மண்டிடும் முறவல் அலை நெளிந்திடும் இதழில் அலை.

கங்கையும் வீழும் அலை நறுமணம் வீசு பொன் அலை
தங்கிடும் மலையலை உறுமணம் அலை சூழ்மலையே
பொங்கிடும் அலையெலாம் உருத்திரமுக மந்திர மாலையே
ஏங்கிடும் அலைமனம் காத்திடும் ஆலாயுதமே.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

**- பரஞ்சோதி முனிவர்**

பிள்ளைமதிச் செஞ்சடையான் பேசாப் பெருமையினால்
கள்ளவிழும் பூங்கொன்றைக் கண்ணியான் உள்ளபடி
கல்லாலின் கீழ் இருந்து கற்பித்தான் ஓர்வசனம் எல்லோரும் ஈடேறவே.

நிறைமதி முகமும் முக்கணும் மூரல்
நிலவு செவ் வாயும் ஈரிரண்டு
நிறைமலர்க் கரமுஞ் செபமணி வடமும்
ஞானமுத் திரையுமாய் நால்வர்க்கு
அறநெறி உணர்த்தி அருள்செய்து கல்லால்
அணிநிழல் இனிது வீற்றிருந்த
மறைமுதல் நடுவீறு அறியொணா ஞான
வடிவினைக் கருத்தில் வைப்பாம்.

**- பவானி கூடற்புராணம்.**

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும்
நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி யேகம்பனே.

**- பட்டினத்தார்.**

# 8 ஸகல காரியங்களினதும் சித்திக்கான ஶ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

## பிரார்த்தனை

1) நம்மிடம் உள்ள செல்வத்தினை விருத்தியடையச் செய்ய ஶ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

**அநர்க்க ரத்ந ஸம்பூர்ணோ மல்லிகா குசுமப் ப்ரிய:**
**தப்த சாமீ கராகாரோ ஜித தாவாநலாக்ருதி:**

இச்சுலோகத்தினை காலையில் 11 தடவைகள் பாராயணம் செய்து வந்தால் இல்லத்தில் தன தான்யங்கள் நிறைவாகக் கிடைக்கும்.

2) எமக்கு வரும் ஆபத்துக்கள் நீங்கவும் சகலவிதமான கஷ்டங்களையும் நிவர்த்தி செய்யவும் ஶ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

**சிந்தாசோக ப்ரசமனோ ஜகதானந்த காரக:**
**ரஸ்மிமாந் புவநேச்ச தேவாசுர சுபூஜித:**

இச்சுலோகத்தினை காலையில் 10 முறை பாராயணம் செய்து வரின் சகல கஷ்டங்களும் நீங்கி வரும் ஆபத்துக்களும் விலகி ஓடும்.

3) சிறைவாச பயம் நீங்க வைக்கும் ஶ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

**குணாகரோ குணச்ரேஷ்ட்ட: ஸச்சிதானந்த விக்ரஹ:**
**சுகத: காரணம் கர்த்தா பவபந்த விமோசக:**

இச்சுலோகத்தினை காலையில் மிகுந்த பக்தி சிரத்தையுடன் 108 முறைகள் பாராயணம் செய்துவரின் சிறைவாச பயம் நீங்கும்.

4) சத்ருக்களை வெல்ல - பகைவர்களை வெல்ல வைக்கும் ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

அந்தகாசுர ஸம்கர்த்தா பகநேத்ரபி தத்புத:
விஷ்வக்ராஸோ தர்மசத்ரு: ப்ரஹ்மஜ்ஞாநைக மந்தர:

இச்சுலோகத்தினை காலையில் 10 முறைகள் பாராயணம் செய்துவரின் துன்பம் தரும் பகைவர்களை வெல்லலாம்.

5) கல்வியில் பரீட்சையில் முன்னேற்றமும் வெற்றியும் அடைய.

வர்த்திஷ்ணுர் வரதோ வைத்யோ ஹரிர் நாராயணோச்யுத:
அஜ்ஞாநவந தாவாக்நி: ப்ரஜ்ஞாப்ராஸாத பூபதி:

இச்சுலோகத்தினை தினம்தோறும் படிப்பதற்கு முன் அல்லது காலையில் 11 முறைகள் பாராயணம் செய்துவரின் சிற்பான பெறுபேறுகளை அடையலாம்.

6) சங்கீதம் முதலிய கலைகளில் முன்னேற்றம் அடைய

ஸங்கீத வேத்தா லோகஜ்ஞ: சாந்த: கலசசம்பவ:
ப்ரஹ்மண்யோ வரதோ நித்ய: சூலீ குருவரோ ஹர:

இச்சுலோகத்தினை தினமும் காலையில் 11 தடவைகள் பாராயணம் செய்து வந்தால் சங்கீதம் முதலிய கலையில் முன்னேற்றம் அடையலாம்.

7) நினைத்த காரியத்தினை நிறைவேற்றிவைக்கும் ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

சிந்தாமணி சுரகுரு: த்யேயோ நீராஜநப்ரிய:
கோவிந்தோ ராஜராஜேசோ பகு புஷ்பார்ச்சநப்ரிய:

இச்சுலோகத்தினை தினமும் இரவில் தூங்குவதற்கு முன் 11 தடவைகள் பாராயணம் செய்து வந்தால் நினைத்த காரியம் எதுவானாலும் எழிதினில் கைகூடும்.

8) திருமணம் தடைப்பட்டுக் கொண்டே வந்தால் தடையை நீக்கித் திருமணத்தினை நடாத்தி வைக்கும் ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்துதி

கல்யாணரூப: கல்யாணக: கல்யாணகுண ஸம்ச்ரய:
சுந்தரப்ரு: சுநயந: சுலலாட: சுகந்தர:

இச்சுலோகத்தினை தினமும் காலையிலும் மாலையிலும் 11 தடவைகள் பாராயணம் செய்து வந்தால் விரைவில் திருமணம் கைகூடும்.




# 9 தட்சணாமூர்த்தி 108 திவ்ய நாமாவளி

ஓம் தென்திசை நோக்கிய தெய்வமே போற்றி
ஓம் கற்றவர் உள்ளும் கனியே போற்றி
ஓம் கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
ஓம் அற்றவர்கட் காரமுதமானாய் போற்றி
ஓம் அல்லலறுத்தடியேனை ஆண்டாய் போற்றி
ஓம் மற்றொருவ ரொப்பிலா மைந்தா போற்றி
ஓம் வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
ஓம் செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி
ஓம் திரு மூலட்டானனே போற்றி
ஓம் வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
ஓம் மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
ஓம் கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
ஓம் அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஓம் கல் ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
ஓம் செங்கனகத் தனிக் குன்றே சிவனே போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் மலையான் மடந்தை மணாளா போற்றி
ஓம் மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
ஓம் நிலையாக என் நெஞ்சில் நின்றாய் போற்றி
ஓம் நெற்றிமேல் ஒற்றைக் கண் ணுடையாய் போற்றி
ஓம் இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஓம் ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
ஓம் சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் பொன்னியலும் மேனியனே போற்றி

ஓம் பூதப் படையுடையாய் போற்றி
ஓம் மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
ஓம் மறியேந்து கையானே போற்றி
ஓம் உன்னுமவர்க் குண்மையனே போற்றி
ஓம் உலகுக் கொருவனே போற்றி போற்றி
ஓம் சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் நஞ்சுடைய கண்டனே போற்றி
ஓம் நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
ஓம் வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
ஓம் வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
ஓம் துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
ஓம் தூநீறு மெய்க்கணிந்த சோதி போற்றி
ஓம் செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் சங்கரனே நின்பாதம் போற்றிபோற்றி
ஓம் சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
ஓம் பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
ஓம் புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
ஓம் அங்கமலத் தயனோடு மாலும் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
ஓம் செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
ஓம் வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
ஓம் கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
ஓம் குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
ஓம் நம்புமவர்க் கரும் பொருளே போற்றி போற்றி
ஓம் நால்வேதம் ஆறங்கமானாய் போற்றி
ஓம் செம்பொனே மரகதமே மணியேபோற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் உள்ளமாய் யுள்ளத்தே நின்றாய் போற்றி
ஓம் உகப்பார் மனத் தென்றும் நீங்காய் போற்றி
ஓம் வானவர் கோன்தோள்துணிந்த மைந்தா போற்றி
ஓம் வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி

ஓம் மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
ஓம் தெள்ளுநீர் கங்கைச் சடையாய் போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் பூவர்ந்த சென்னிப் புனிதா போற்றி
ஓம் புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
ஓம் தேவார்ந்த தேவர்க்குந்தேவே போற்றி
ஓம் திருமாலுக் காழி அளித்தாய் போற்றி
ஓம் சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
ஓம் சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
ஓம் சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் பிரம்மன்றன் சிரமரித்த பெரியோய் போற்றி
ஓம் பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
ஓம் கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
ஓம் காதலிப்பார் காற்ற எளியாய் போற்றி
ஓம் அருமந்த தேவர்க் கரசே போற்றி
ஓம் அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
ஓம் திருமூலட்டானனே போற்றி போற்றி
ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி
ஓம் என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி.



## 10 தட்சணாமூர்த்தி கீர்த்தனை

இராகம் - பேனத்யுதி ஆ- ஸரிமபதநிஸா
(1வது மேளம் ரத்னாங்கியின் ஜென்யம்) அ - ஸநிதபமகரிஸா
தாளம் - ஆதி

**பல்லவி**

ஸ்ரீ தட்சிணா மூர்த்தி மீசம்
சித் ப்ரகாசம் ப்ரணௌமி (ஸ்ரீ)

**அனுபல்லவி**

வேதாந்த வேத்யம் ந்யக்ரோத
வ்ருட்ச மூல வாஸினம் வல்லகீ

**மத்தியம காலம்**

நாதானு பவமோ தமம்ருத பேனத்யுதிமந்த
ஸ்மிதமுகாம்புஜம் (ஸ்ரீ)

**சரணம்**

ஜனனாதி கேத பஞ்ஜன சதுரம்
ஜக திந்த்ர ஜால சமத்க்ருதிகரம்
முனிஜனாதி நிகில ஸம் ஸயஹரம்
முத்ராகரம் குருகுஹாகரம்

**மத்யமகாலம்**

அனாத்ய வித்யாதமோ பாஸ்கரம்
ஆசார்ய சேசகரம் சுந்தரம்
மனோவாக கோசரம் சசிதரம்
மௌனினம் மதனஹரம் சங்கரம் (ஸ்ரீ...)

**பொருள்:**

வேதாந்தங்களால் போற்றப்படுபவரும், ஆலமரத்தின் அடியில் வசிப்பவரும், வீணாகானத்தில் லயிப்பவரும், அமுதத்தின் நுரைபோன்ற காந்தியுடைய புன்முறவல் பூத்த முகத்தினரும், பிறப்பு - இறப்பு என்கின்ற துயர்நீக்கும் வித்தகரும், உலகத்தை இந்திர ஜாலம்போல் காட்ச்சியளிக்கச் செய்பவரும், முனிவர்கள் முதலிய அனைவருக்கும் சந்தேகத்தைப் போக்குபவரும், ஞானமுத்திரை தரிப்பவரும், அமைதியான மாயை என்கின்ற இருளைப் போக்கும் சூரியனும், மேலான குருவும், அழகிய ரூபமுடையவரும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவரும், பிறைசூடி, மௌனத்தில் இருப்பவரும், மன்மதனை அழித்தவரும், ஞானஒளியுமானஸ்ரீ தட்சணா மூர்த்தி ஸ்வாமியை வணங்குகின்றேன்.

இராகம் : சங்கராபரணம்
தாளம் : ஜெம்பை

**பல்லவி**

தட்சணா மூர்த்தே விதளித தாஸார்தே - ஸ்ரீ
சிதானந்த பூர்தே ஸதா மௌனி கீர்தே

**அனுபல்லவி**

அக்ஷய சுவர்ண வடவ்ருட்ச மூலஸ்திதே
ரக்ஷமாம் ஸனகாதி ராஜயோகி ஸ்துதே

மத்திம காலம்

ரட்சிதஸத்பக்தே சிட்சிததுர்கதே
அட்சரானுரக்தே அவித்யா விரக்தே

**சரணம்**

நிகில ஸம்சய ஹரணநிபுணதர யுக்தே
நிர்விகல் பஸமாதி நித்ரா ப்ரஸக்தே
அகண்டை கரஸ பூர்ணாரூட சக்தே
அபரோ க்ஷசநி த்யபோதானந்த முக்தே

மத்திம காலம்

சுகதரப்ர வ்ருத்தே ஸ்வா ஞான நிவ்ருத்தே
ஸ்வகுருகுஹோ த்பத்தே ஸ்வானு போகத்ருப்தே.

# 11 குருபகவான் கவசம்

பூமலி பொய்கை போன்றான்
        பொன்னவன் குருவே காக்க
நாமலி கவிதை நல்கும்
        நல்லசற் குருவே காக்க
தேமலி வானோர் தங்கள்
        திவ்யநற் குருவே காக்க
பூதலத் தோர்கள் போற்றும்
        புத்ரகாரகனே காக்க.

தனுவோடு மீனம் கொண்ட
        தண்ணளிக் குருவே காக்க
புனிதமாய் கடகம் தன்னில்
        பூரித்து உச்சம் காணும்
கனியெனும் குருவே காக்க
        கருதுபொன் னளிப்போன் காக்க
இனியன யாவும் நல்கும்
        ஏற்றநற் குருவே காக்க.

பாவமாம் நான்கிற் குற்ற
        பரிவினன் பரிந்து காக்க
மேவிடச் செல்வம் நல்கும்
        மேலவன் குருவே காக்க
ஆவிசோர்ந் தலறும் வேளை
        ஆதரித் தருள்வோன் காக்க
தேவர்கள் குருவாய் என்றும்
        திகழ்வுறும் கருணை காக்க

காக்கவே கனகம் ஈவோன்
        கருதியே காக்க காக்க
நோக்கினில் பசுமை கொண்ட
        நுண்மையன் நுணக்கி காக்க
வாக்கினில் பொருளாய் நிற்கும்
        வல்லவன் குருவே காக்க
பாக்கினில் துவராய் ஆன
        பண்பினன்பரிந்து காக்க

இடபமும் மிதுனம் சிம்மம்
        இவற்றொடு கன்னி கும்பம்
திடமுடை துலாமைத் தன்றன்
        துணையுறு நட்பாய்க் கொண்ட
திடமுடைக் குருவே காக்க
        திறனளிப் போனே காக்க
தடமதில் அரனே நல்கும்
        தரும்அருங் குருவே காக்க

மங்களன் மேடம் தேளை
        மறைவழிப் பகையாக் கொண்டு
திங்களின் ஏழாம் வீட்டைத்
        தீமைசெய் நீச்ச வீடாய்க்
கொண்டவன் கருணைக் கொண்டல்
        கொள்கையாய்க் காக்க காக்க
என்றுமே ஏற்றம் நல்கும்
        இனியசற் குருவே காக்க

இலக்கினம் தன்னில் நின்று
        இணையிலாச் செல்வம் நல்கும்
குலமதைச் தழைக்கச் செய்யும்
        குருவென்றும் எம்மைக் காக்க
நலமருள் புனர்பூ சத்தோன்
        நயந்தெமை என்றும் காக்க
வலமுடை விசாகன் தானும்
        வல்லமை தந்தே காக்க

ஆரமோ டகிலும் தேக்கும்
　　ஆனதோர் மலையின் மாட்சி
வாரணம் தன்னில் ஏறும்
　　வல்லசற் குருவே காக்க
பூரணப் பூரட் டாதிப்
　　புங்கவன் என்றும் காக்க
காரணம் ஓர்ந்து நல்கும்
　　கண்ணியன் கருணை காக்க

முல்லையை மலராய் நேர்ந்த
　　முளரிகொள் முகத்தோன் காக்க
வல்லமை நல்க வல்ல
　　வலியசற் குருவே காக்க
நல்லதோர் கருணை கொண்ட
　　நயனுடை விழிகள் காக்க
நல்லவர் போற்றும் தேவன்
　　நாடியே எம்மைக் காக்க

மதியொடு கலந்த போது
　　மங்களம் அருள்வோன் காக்க
நிதிமகன் செவ்வாய் கூடில்
　　நேர்மையாய் மனைகள் நல்கி
விதிமகன் தன்னை நோக்க
　　வேண்டிய செல்வம் ஈவோன்
கதியென அமைந்தோன் நீதிக்
　　காதியாம் குருவே காக்க.

ஆதவனோடு கூடில்
　　அருளொளி ஈவோன் காக்க
நீதியாய் உயரம் வீரம்
　　நிலைத்திடச் செய்வோன் காக்க
மாதவர் போற்றும் ஈர
　　மனமுடைக் குருவே காக்க
மோதவும் கருணை கொண்டோன்
　　பூதலம் தன்னிற் காக்க

பொன்னிற ஆடை வேட்கும்
புனித சற்குருவே காக்க
நன்னயக் கனக புட்ப
ராகமாம் மணியை நேர்வோன்
என்குலம் காக்க மொச்சை
இரும்பயி ரோனே காக்க
புண்ணியர் போற்றும் வானோர்
போற்றிடும் குருவே காக்க.

வற்றினை என்றும் அந்த
வல்லவன் வலிந்து காக்க
பயின்றிடும் மொழியாய் வந்து
பரிவுடன் பாடம் காக்க
குயிற்றிடும் மணிபொன் செல்வம்
குவிந்திடச் செய்வோன் காக்க
மயற்றிறம் நீக்கிக் காக்க
மாண்புறு குருவே காக்க

ஐந்தொடு ஏழு ஒன்பான்
அருமைகொள் பார்வை கொண்ட
மைந்தனை நல்கும் கொள்கை
மாதவக் குருவே காக்க
மைந்தெனும் வலிமை நல்கும்
மறையவர் ஆதி காக்க
இந்துவின் வீட்டை உச்சம்
ஏற்றவன் என்றும் காக்க.

தங்கமே தருவோன் எங்கள்
தலைதனைக் காக்க காக்க
பொங்கிய கருணைத் தேவன்
பூத்த நல் விழிகள் காக்க
தங்கிய நீதிக் காகத்
தறுகணன் நாசி காக்க
மங்கிடா வண்ணம் காக்க
மதிப்பருள் செவியைத் தானே

தானெனும் மருமம் தன்னை
　　தக்கசற் குருவே காக்க
ஆனதோர் வயிற்றைக் காப்போன்
　　அதரித் தெம்மைக் காக்க
ஊனமில் வண்ணம் காக்க
　　உத்தமக் குய்யம் தன்னை
ஈனமில் குறியைக் காக்க
　　எம்குரு என்றும் காக்க.

கேந்திர தோடம் கொண்டோன்
　　கேட்டினைக் களைந்தே காக்க
ஏந்திய கருணைத் தீபம்
　　என்றவெம் குருவே காக்க
நீந்தினோம் வாழ்கை பௌவம்
　　நீதிதரு வோனே காக்க
மாந்தினோம் கருணைத் தேனை
　　மாண்புறு குருவே காக்க

தொடையினைக் காக்க காக்க
　　தூயநற் கணைக்கால் காக்க
மிடைபடு துயரம் நீக்கி
　　மேலவன் குருவே காக்க
தடையெல்லாம் தகர்ப்போன்　காக்க
　　கருணை காக்க
அடைமழைக் கருணை கொண்ட
　　அற்புதக் குருவே காக்க.

சென்னை - மதி நிலையம் வெளியீட்டிலிருந்து.

❀❀❀❀❀❀

## (12) திருமுறைப் பாடல்கள்

### திருவீழிமிழலை

**திருமுறை - 1**

**சம்பந்தர்** பண்: மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஏரிசையும் வடஆலின் கீழிருந்தங்கு
ஈரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே.

### திருநல்லூர்மயானம்

**திருமுறை - 2**

**சம்பந்தர்** பண்: சீகாமரம்

கல்லாநிழல்மேவிக் காமுறுசீர் நால்வர்க்கன்று
எல்லா அறனுரையும் இன்னருளாற் சொல்லினான்
நல்லார் தொழுதேத்தும் நாலூர் மயானத்தைச்
சொல்லாதவரெல்லாஞ் செல்லாதவர் தெல்நெறிக்கே.

## திருக்கோட்டாறு

**திருமுறை - 3**

சம்பந்தர் பண்: காந்தாரபஞ்சமம்

ஏலம லர்க்குழல் மங்கைநல் லாளிம வான் மகள்
பாலம ருந்திரு மேனிஎங்கள்பர மேட்டியும்
கோலம லர்ப்பொழில் சூழ்ந்தெழி லார்திருக் கோட்டாற்றுள்
ஆலநீ ழற்கீழ்இருந்து அறஞ் சொன்னஅ ழகனே.

## திருப்பழனம்

**திருமுறை - 4**

திருநாவுக்கசர் திருநேரிசை

ஆலின்கீழ் அறங்களெல்லாம் அன்றவர்க் கருளிச்செய்து
நூலின்கீழ் அவர்கட்கெல்லா நுண்பொரு ளாகிநின்று
காலின்கீழ் காலன் தன்னைக் கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யு மானார் பழனத்தெம்பராம னாரே.

## திருவாட்போக்கி

**திருமுறை - 5**

நாவுக்கரசர் திருக்குறுந்தொகை

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நிழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே.

## திருநாரையூர்

**திருமுறை - 6**

நாவுக்கரசர் திருத்தாண்டகம்

ஆலாலம் மிடற்றணியா அடக்கினானை
ஆலதன்கீழ் அறம்நால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையானானை

மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியின் பயனாய விமலன் தன்னை
நாலாய மறைக் கிறைவன் ஆயினானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

## திருநாகேச்சரம்

**திருமுறை - 7**

சுந்தரர் — பண்: பஞ்சமம்

அருந்தவ மாமுனிவர்க்கு அருளாகியோர் ஆலதன்கீழ்
இருந்தறமே புரிதற்கு இயல்பாகி யதென்னை கொலாம்
குருந்தய லேகுரவம் அரவின் னெயிறேற் றரும்பச்
செந்திசெம் பொன்மலருந் திருநாகேச் சரத்தரனே.

**திருமுறை 8**

மாணிக்கவாசகர் — திருவாசகம்

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

## சிதம்பரம்

**திருமுறை 9**

திருவிசைப்பா

திருவொலியமுதனூர் — பண்: இந்தளம்

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய் காண அருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்சலிகள் பரவ வெளிப்ப பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக் கருளித் தேவன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் பண்: பஞ்சமம்

நிட்டையில் லாவுடல் நீத்தென்னை யாண்ட நிகரிலா
வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெகவூறும் அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**திருமுறை - 10**

திருமூலர் திருமந்திரம்

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லால்நிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை யோராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக வொருங்கின் றார்ளே.

**திருமுறை - 11**

பரணதேவநாயனார் சிவபெருமான் திருவந்தாதி.

ஆல நிழற்கீழ் இருப்பதுவும் ஆய்வதறம்
ஆலம் அமுது செய்வ தாடுவதீ - ஆலந்
துறையுடையான் ஆனை உரியுடையான் சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்லு.

**திருமுறை -12**

சேக்கிழார் பெரியபுராணம்

ஆலின்கீழ் நால்வர்க் கன்று அறமுரைத்த அங்கணனை
நூலின்கட் பொருள் பாடி நூலறிவார்க் கீந்தானைக்
காலம்பெற் றினிதி றைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொள் தென்ன வனும் தேவியரும் உடன்போத

திருச்சிற்றம்பலம்

# 13 கோளறு திருப்பதிகம்

**ஒன்பது கிரகங்களினதும் துன்பங்களிலிருந்து விடுபட**

கோள் என்றால் குற்றங்கள், துன்பங்கள் என்னும் கருத்தில் எல்லாவிதமான குற்றங்கள், குறைகளை போக்கும் பதிகமாக இது அமைந்திருக்கின்றது. திருஞான சம்பந்ருக்கு இப்பதிகம் ஒன்பது கிரகங்களினாலும் வந்த துன்பங்களை யெல்லாம் நன்மைகளாக மாற்றியது என்பதை சம்பந்தர் வரலாறு மூலம் காணலாம். இப்பதிகத்தில் வரும் ஒவ்வொரு பாடலும் கூறும் விதத்தில் சிவனை உள்ளன்போடு பாடிப்பரவுவதன் மூலம் தொடரும் துன்பங்களிலும் குற்றங் களிலும் இருந்து விடுபட்டு மகிழ்வாக வாழலாம்.

திருச்சிற்றம்பலம்

பண் : பியந்தைக் காந்தாரம். இராகம் :- நவரோசு

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு,திங்கள்,செவ்வாய்,புதன்,வியாழம்,வெள்ளி,
சனி,பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும், நல்ல நல்ல அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி, ஏழை உடனே,
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு, ஆறும்.
உடனாய நாள்கள் அவைதாம்,
அன்பொடு நல்லநல்ல, அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும், வெள்ளை விடைமேல்
முருகு அலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
திருமகள், கலை அது ஊர்தி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,
அருநெதி நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

மதி நுதல் மங்கையோடு, வடஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்,
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்,
அதிகுணம் நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள்தனோடும்
விடை ஏறும், நங்கள் பரமன்,
துஞ்சு இருள், வன்னி, கொன்றை முடிமேல்அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும், உரும்-இடியும், மின்னும்
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும், நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

வாள்வரி அதள்அது ஆடைவரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்,
கோள்அரி, உழுவையோடு, கொலையானை கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

செப்பு இளமுலை நல்மங்கை ஒருபாகமாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்புஇள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்போடு, குளிரும் வாதம், மிகையான பித்தும்,
வினையான வந்து நலியா,
அப்படி நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்து அன்று, விடைமேல் இருந்து
மடவாள்தனோடும் உடனாய்,
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர்ஆன வந்து நலியா,
ஆழ்கடல் நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

பலபல வேடம் ஆகும்பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல், மேரு நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே.

தேன்அமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி,
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முநிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர், ஆணை நமதே.



# 14 விரும்பிய பலன்கள் பெற்று மகிழ்ந்திட தேர்ந்தெடுத்த திருமுறை முத்துக்கள்

## வினையகன்று நன்மைகள் கிடைக்க

### திருக்கோணமலைப் பதிகம்

திருஞான சம்ந்தர் பண்: புறநீர்மை

இப்பதிகத்தினை பாராயணம் செய்பவர்களும் அவருடைய சுற்றத்தாரும் நன்மைபெற்று மகிழ்வார்கள்.

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலைமயமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

## அனைத்து உடல் நோய்களையும் போக்க - சிறப்பாக வயிற்று நோய் தீர

### திருவதிகை வீரட்டானம்.

திருநாவுக்கரசர் பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

திருச்சிற்றம்பலம்

**அதிக துன்பமான சமயத்தில் அமைதிகிடைக்கவும், தடைப்படும் திருமணம் கைகூடவும் :**

திருமருகல் பண் : இந்தளம்
சம்பந்தர் தேவாரம் ராகம் : மாயா மாளவ கௌளை

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே.

திருச்சிற்றம்பலம்

**குருவருளினால் சிவனருள் கிடைக்கவும், தொல்வினைகள் அகலவும் துன்பமில்லாத இன்ப வாழ்விற்கும் ஓத வேண்டிய தேவாரம்:**

சம்பந்தர் தேவாரம் — பண் : நட்டபாடை
திருப்பிரமபுரம் — இராகம்: நாட்டை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
　　தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
　　உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்
　　பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரம்மேவிய
　　பெம்மான் இவன்அன்றே.

திருச்சிற்றம்பலம்

**கல்லுடன் கட்டி கடலில் அமிழ்த்துதல் போன்ற துன்பத்தினையும் போக்கவல்ல தேவாரம்:**

பண் - காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

**தடைப்படும் திருமணம் மிக விரைவில் நடைபெற ஓத வேண்டியது :**

பண் : சாதாரி — இராகம் : பந்துவராளி

நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு
　　என்புநிரை பூண்பர் இடபம்
ஏறுவர் யாவரும் இறைஞ்சு கழல்
　　ஆதியர் இருந்த இடம் ஆம்
தாறுவிரி பூம்மலி வாழை விரை
　　நாறஇணை வாளை மடுவில்
வேறுபிரியாது விளையாட வளம்
　　ஆகும் வயல் வேதி குடியே.

**சர்ப்பதோஷத்தால் திருமணம் தள்ளிப்போவதை தவிர்ப்பதற்கு ஓதவேண்டியது :**

பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கியை

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.

**மது முதலிய தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையானவர்களை மீட்டு நல்வழிப்படுத்த ஓதவேண்டிய தேவாரம் :**

பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்ச்சடை சுற்றி முடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம் எலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர்மாண்பே

**சிறை வாசத்தை தடுக்கவும் சிறையிலிருந்து விடுதலை பெறவும் :**

பண் : கௌசிகம் இராகம் : பைரவி

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்று அருள் செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே.

**மாணவர்கள் கல்வியில் உயர்வடைய ஓதவேண்டிய தேவாரம் :**

பண் : இந்தளம் ராகம் : நாதநாமக்கிரியை

சுற்றமொடு பற்றுஅவை துயக்குஅற அறுத்துக்
குற்றஇல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வான் உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

**காய்ச்சல் பித்தம் முதலிய வெப்ப மிகுதியால் ஏற்படும் நோய்கள் நீங்க ஓதவேண்டிய தேவாரம் :**

பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறுசமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே.

**கர்ப்பிணிகள் நலம் பெற :**

திருக்கருகாவூர் பண் : கௌசிகம்

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே.

**எலும்பு முறிவு முதலியன குணம் அடைய ஓத வேண்டிய திருமுறை :**

பண் : சாதாரி ராகம் : பந்துவராளி

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடு நீள் கொடிகள் மாடம்மலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்கு விரி கொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே.

# 15 தினந்தோறும் பாராயணம் செய்யவேண்டிய நவக்கிரக துதிகள்

பிரம்மஸ்ரீ த. காசிநாதக்குருக்கள் அவர்கள் இயற்றிய கீழ்வரும் நவக்கிரக தோத்திரம் எத்தகைய கடுமையான துன்பங்கள் ஏற்படினும் அத்துன்பங்களை போக்கவல்லதாகும். அதுமட்டுமல்லாமல் எந்தக்கிரகம் எமக்கு அதிகமான பாதிப்பினைத் தருக்கின்றதோ அக்கிரகத்திற்குரிய துதியினை தினந்தோறும் சக்திக்குத் தக்கவாறு 03, 09, 11, 21, 27, 35, 108 முறை பாடித் துன்பத்தில் இருந்து விடுபடலாம். அத்துடன் அனுதினம் அன்போடு நவநாயகர்களையும் அவர்களின் அனுக்கிரக மூர்த்திகளையும் அதாவது அதிதேவதைகளையும் (சிவன், உமை, முருகன், விஷ்ணு, தட்சணாமூர்த்தி, இந்திரன், யமன், துர்க்கை, விநாயகர்) துதி செய்துவரின் ஆயுள்விருத்தி, கல்வி விருத்தி, சந்ததி விருத்தி, சரீர சுகம், திரவிய விருத்தி, அரச உதவி முதலிய நற்பலன்களை நவநாயகர்கள் அருள்வார்கள். எனவே இத்துதியினை அனைவரும் தினம் தோறும் துதி செய்து பயனடைவீர்களாக.

### காப்பு

மலரிருந் தகிலாண்டங்கண் மாண்பொடு படைத்து வேத
நலமுட னோது கின்ற நான்முகப் புராண தேவன்
இலகுறு பாதம் போற்றி இனன்முதற் கிரக தோஷம்
நிலமிசை நீங்கி வாழ நேயமார் துதிசொல் வேனே.

## நூல்

### ஆசிரிய விருத்தம்

### சூரியன் துதி

சீரேறு மாயிரஞ் சோதிசே ரையனே
        தினகரக் கடவுளே பார்
திகழ்கின்ற மக்களைக் கருமங்களாற்றினுஞ்
        சிறந்தநற் சாட்சியாகப்
பேரேறு மன்பினா லேத்தவரு துய்யனே
        பெமையுள கிரகபதியே
பெண்ணிருவர் பக்கலுற ஓர்பெருந் தேரிலே
        பிரியமொடு தோன்று தேவ
ஏரெறி ரண்டுவெண் டாமரைக ணாளமோ
        டிருகைக ளேந்தி மிளிர
இருகையப யம்வரத மேவுசிவ பாஸ்கரா
        இலகுசெந் நிறமேனியாய்
நேரேறு மரியோரை யீசனே யுன்பாத
        நியதியோடு தாழுகின்றேன்
நேயமொடு கண்ணினாற்றமியேனை நோக்கியே
        நீடஅருள் செய்குவாயே.

### சந்திரன் துதி

பண்ணவரு மிந்திரனு நான்முகப் பிரமனும்
        பரலோக பிதிர்கடாமும்
பாரிலுறை மானுடரும் முய்யவரு மமுதனே
        பகருமிரு பத்தேழதாய்
எண்ணவரு தாரகைக ணாதனே
        இமகிரண ஈசனே யிரவின் இறவைா
எழிலேறு குமுதமலர் கதையபய வரதங்கள்
        இயைவுறு கரங்களுடையாய்
அண்ணலரன் மாமுடி யமர்ந்துவளர் புண்ணியா
        அலவரா சிக்கதிபனே
ஐயிருபரித்தொகுதி பூண்டதே ரேறிவரும்
        ஐயனே ஓஷதீசா

வண்ணவெண் கலையணிக ளாதியன புனைகுவாய்
மதியமே யுனது பாதம்
மறவாது சிந்தித் திறைஞ்சுவேனடியனேன்
மகிழ்வரந்தந் தருள்வையே.

## அங்காரகன் துதி

பரமசிவ னானத் துற்றவேர் வைத்திவலை
படியினிடை வீழவதனிற்
பண்புட னுதித்தலாற் குசனில மகன் முதற்
பலபெயர் வழங்கு புனித
திரவுதிர நேரெழின் மேனியாய் சுகமார
செவ்வாடை செய்ய மாலை
செய்யமணி யணிகலம் புனைகுவா யாடெனும்
சீர்கொள் வாகன மேவுவாய்
சரவண பவக்கடவு டனையதிபதிப னாகவுறு
சால்புளாய் சூலமுடனே
சக்திகதை பதுமமிவை தாங்குவாய் தேேளாடு
தகரிரா சிக்கு மதிப
விரைசெறியு நின்பாத கமலமல ரிணைகளை
விரும்பியிநனி யேத்துகின்றேன்
வேண்டுபல் வரங்களையு மென்றனக் குதவியே
விழைவினோடு காத்தருள்வையே.

## புதன் துதி

அந்திரு விளங்குமணி மார்புடை மாயனை
அதிபதி யெனக்கொள் செல்வ
அமுதமய மாமதி உரோகிணிப் பெயர் மேவு
ஆயிழையோ டீன்றதனய
முந்துமறை யாதிபல கலையெலாந் தேர்ந்துணரு
முதறிவு மிக்கபுலவ

மொழிபீத வன்னமா மேனியுடையணி
முதலான சிறந்தபுனித
சித்துரப் பகையான வூர்தியாய் மிதுன மொடு
சேயிழை யிராசி யதிப
சிதமான கடகமொடு கதையபய வரதங்கள்
சேர்வுறு கரங்களுடையாய்
சந்ததமு முன்பதம் பத்தியொடு பணிகுவேன்
சகலகலை ஞான முடனே
சத்சனர்கள் சகவாச மாதிய நயங்களைத்
தந்தெனக் கருளுவாயே.

## குரு துதி

உலகுயிர்க ளாக்குதச பிரமர்களுள் ஒருவனா
முயரங்கி ராவின் மதலாய்
ஓங்குமதி மேன்மையா லிணைசொலற் கருமையா
முத்தமா உம்பரோடு
பலமுனி சிரேட்டரும் புகழ்பரவி யேத்திடும்
பான்மையார் தேவகுருவே
பரமேட்டி யிறையை யதி பதியாக வுற்றுளாய்
பக்தருக்கருள்செய் பகவா
நலமேவு பொன்மேனி யாடையணி யுற்றுளாய்
நவில்சாப மீனவதிப
நண்ணுசெப மாலைவர தங்கதை கமண்டல
நயந்தொளிர ஏந்து மிறைவ
வலமேவு மாதங்க மூர்ந்தருசெய் யண்ணலே
மலரடிக ளேத்துகின்றேன்
வாக்குவல் லமைகல்வி செல்வமிவை நல்கிமுன்
வந்தெனக் கருள்வாயே.

## சுக்கிரன் துதி

உயருமதி நுட்பமார் பிருகுதரு புத்திரா
உரமிகுந் தானவர்களுக்
குதவிபல வாற்றுவாய் விண்கோனை யீசனா
யுற்றுளா யசுரகுருவே
நயமருவு பலகலைக ளோதியுணர் விபுதனே
நண்ணினர்க் கருள்செய் முதலே
நாடுதவ யோகியே மழைபொழிய அருள்புரியு
நாயகா தரள மானஞ்
சயமேவ வூர்ந்தருள்செய் நாததுலை விடையெனச்
சாற்றுமோ ரைக்கதியனே
தண்டுசெப மாலைவர தங்கரக மென்னுமிவை
தாங்குவாய் தருமமூர்த்தி
பயசுநிகர் வெண்மேனி யாடைமுத லொளிரவரு
பார்க்கவா வுனதுபாதம்
பயபக்தியோடுநனி போற்றுவேன் வேண்டிடும்
பலவரந் தந்தருள்வையே.

## சனீஸ்வர துதி

பெருமைசேர் தினகரக்கடவுணன் மைந்தனே
பெரிய ரோமங்க ளுடையாய்
பேசரும் ப.்.றவஞ் செய்துளா யுத்தமா
பேணுவார்க் கருள்செ யீசா
கருமைசேர் மேனியுடை யாதியன கொண்டுளாய்
காகவா கனமுருவாய்
கண்ணியா கும்பமா னெனுமிவற் றதிபனே
கருதவருமந்த கதியாய்

பொருசாப மத்திரஞ் சூலமொடு வரதமிவை
பொற்புறு கரங்களுடையாய்
புகலும்வை வச்சுத னதிபதினென வுற்றுளாய்
புண்ணியா கோபமூர்த்தி
மருவுமெக் கோளுலக மெவையினும் மேலுலகில்
வர்முவாய் ஞானவிழியாய்
மலரடிகள் போற்றுவேற்காயுளொடு செல்வநனி
வளரவருள் செய்குவாயே.

## இராகு துதி

சீரமரர் நடுவிருந் தமுதமுண் செயலினாற்
சிரமுட லிரண்டு கூறாய்ச்
செய்தவத் திருமாலி னேவலாற் பரமனாஞ்
சிவனைநனி போற்றியிந்தப்
பாரவரு மேனையரு மேத்தவரு கிரகமாம்
பதவிபெற் றிலகுபுனித
பசுபதித் தேவனின்சடை யிலுறை சோமனாம்
பண்ணவன் பகைவனாகிக்
காரரவ மாய்மறைத் திடுகின்ற அண்ணலே
கருதுசிங் கிகைமைந்தனே
கருமேனி யாதிய வமைந்துளாய் சூலமொடு
கட்கவர சர்மதரனே
பேருமரி யூர்தரு மிராகுவெனு மீசனே
பேணிநின் பாதகமலம்
பெட்பினொடு மேத்துவேன வேண்டுசுக போகங்கள்
பெற்றுய்ய அருள் செய்வையே.

## கேது துதி

ஐங்கணைக் கிழவனென வோதுசித் தசனினல்
லையனாங் கண்ணனாதி
யமரரொடு மற்றுளரு மேத்தவரு ளீசனாம்
ஐம்முகச் சிவபிரானின்
சங்கைமிகு பாதங்கள் போற்றியே கோளெனச்
சாற்றவரு கேதுமூர்த்தி
தபனனின் பகையாகி யங்கிநிற அரவமாய்ச்
சார்ந்துபீ டிக்குமிறையே
பங்கமில் லாதகதை கட்கவர தங்களிவை
பரிசையொடு தாங்குதலைவ
பருமையுள மகிடவா கனமேறு செல்வனே
பல சித்ர வர்ணமான
துங்கமுள மேனியுடை யாதியன கொண்டுளாய்
துய்யநின் பாதகமலம்
தொழுதுபணி வேனுக்கு ஞானநெறி நல்வாழ்வு
தூயசுக முதவியருளே.

## நூற்பயன் (வேறு)


இந்தவா றினன்முத லிவர்க டோத்திரம்
புந்திசே ரன்பொடு போற்று வோர்கடாஞ்
சிந்தையி னினைந்தவா சித்தியெதியிங்
கிந்திர னென்னவே யினிது வாழ்வரே.

நவக்கிரக தோத்திரம் முற்றிற்று.

# 16 நவக்கிரக ஆராதனை

## நவக்கிரக வழிபாடு

### சூரியன்



சூரிய பகவான் தலை, ஆண்களின் வலது கண், பெண்களின் இடது கண், இதயம், மூளை, மார்பு, நுரையீரல், தொண்டை முதலான வற்றைக்குறிக்கின்து. இவைகளில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் மங்கிய பார்வை, தலை வலி, படபடப்பு, வழுக்கை (தலை முடி கொட்டுதல்) இதயநோய், காக்காய் வலி, அப்பெண்டிசிடிஸ், சன் ஸ்ரோக், அலைச்சல், சுரம், சித்தப்பிரமை முதலியன ஏற்படாது இருக்கவும், மேலதிகாரிகள், நிர்வாகிகள், அரச ஊழியர்கள் முதலியோருக்கும் சூரியனே அதிதேவதை. இவர்களுக்கு ஏற்படும் பிரைச்சனைகளில் இருந்து விடுபடவும், தந்தைக்கு ஏற்படும் சௌகரியம் அசௌகரியம் பற்றிய நிலையை அறிந்து கொள்வதற்கும் சூரியனே துணைநிற்கின்றான். ஆரோக்கியம், உற்சாகம், சத்துருஜெயம், நீண்ட ஆயுள், வீரியம், இருதயபலம், துணிவு, கீர்த்தி முதலிவை கைவரப்பெற்று மகிழ்திடவும், சைவ அனுஷ்டானம், வேள்வி, முதலியன சிறக்கவும் சூரியதோஷம் உள்ளவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் முறைப்படி விரதம் இருத்தல் சிறப்பினைத்தரும். சூரியனுக்கு சிவப்பு நிற பட்டு அணிவித்தல். கோதுமை தானியம் தானம் வழங்கல். சிவப்பு நிறப்பூக்களாலும் செந்தாமைரைமலராலும் அர்ச்சனை செய்தல். சக்கரைப்

பெங்கல் நிவேதித்தல். எருக்கலம் சமித்தினால் கோமம் செய்தல். மாணிக்க இரத்தினம் பதித்த மோதிரம் முதலான அணிகலம் அணிந்துகொள்ளல். சிவனை ஆராதித்தல். இவ்வாறான வழிபாட்டினாலும் சூரிய கவசம் முதலியன ஓதுவதனாலும், சூரிய தோஷம் நீங்கி நல்வழ்வு அடைவார்கள்.

## சந்திரன்



சந்திர பகவான் பெண்களின் மார்பகம், கர்ப்பப்பை, ஆண்களின் இடது கண், பெண்களின் வலது கண், இதயம், சுரப்பிகள், ரத்தம், உமிழ்நீர், ஆகியவற்றினைக் குறிக்கின்றது. இவற்றில் பாதிப்புறாமல் இருக்கவும், தாய்கு ஏற்படக்கூடிய சுப அசுப பலன்களை அறிந்து கொள்ளவும், பெண்களுக்கு ஏபடும் நோய்களில் இருந்து விடுபடவும், உடல் வலிமை பெறவும், உத்தியோக பலன் கிட்டவும், வயிற்று வலி கோளாறுகள் நீங்கவும், நுரையீரல் வலிமை பெறவும், ஆனந்த மான நித்திரை கிடைக்கவும், மனத்துாய்மை பெறவும், தோஷம் உள்ளவர்கள் திங்கட் கிழமைகளில் விரதம் அனுஷ்டித்து, வெள்ளை நிறப்பட்டு அணுவித்தல். நெல்லுத்தானியம் தானம் கொடுத்தல். வெள்ளை நிறப்பூக்ளாலும் வெள்ளரளியாலும் அர்ச்சித்தல். வெண் பொங்கல். நெய் கலந்த பாயாசம் என்பன நிவேதித்தல். பலாசம் சமித்தினால் கோமங்கள் செய்தல். முத்துப்பதித்த அணிகலங்கள் அணிந்து கொள்ளல். இவற்றின் மூலம் சிறப்பான நற்பலன் உண்டாகும். இதனால் கீர்த்தியும் புஷ்டியும் உண்டாகும். ரத்தம் சம்பந்தமான நோய் நீங்கும். மனக்கஷ்டம் தீரும், சுகபோசனம் கிடைக்கும், உடல் சௌகரியம் உண்டாகும், உழவர், விவசாயிகள் சலவைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மேன்மை யடைவார்கள். கௌரி அம்பாள் அருள் கிடைக்கும். இவ்வாறு சந்திர பகவானை பிராத்தனை செய்து கொள்வதன் மூலம் சந்திரன் தோஷம் நிவர்த்தி அடைகின்றது. உமை அம்மை அருள் உண்டாகின்றது.

## செவ்வாய்



செவ்வாய் பகவான் காது, மூக்கு,நெற்றி, சிறுநீரகம், தசைகள், பாலுணர்வூட்டும் உறுப்புக்கள், சுவை நரம்புகள் ஆகியவற்றினைக் குறிக்கின்றது. இவற்றில் பதிப்பு ஏற்படாதிருக்கவும் சகோதரர், சகோதரிகள் பற்றிய சுபஅசுப பலன்களை தெரிந்து கொள்ளவும், காது, தொண்டை, மூக்கு பற்றிய நோய்கள் ஏற்படாது இருக்கவும். ரத்தம் சம்பந்தமான நோய்கள் விலகவும். சொறி. சிரங்கு முதலிய உபாதைகள் உள்ளவர்கள் நன்மை பெறவும் தோஷம் உள்ளவர்களும் வழிபாடு செய்வதன்மூலம் பல நற்பலனைப் பெறுவார்கள்.

செவ்வாய்க் கிழமைகளில் விரதம் அநுஷ்டித்தல். சிவப்பு நிறபட்டு அணிவித்தல். துவரைத்தானியம் தானமாகக் கொடுத்தல். சிவப்பு நிறப்பூக்களாலும் சணபகப்பூவினாலும் அர்ச்சனை செய்தல். பொங்கல், துவரைசேர்த்த அன்னம் நிவேதித்தல். கருங்காலி சமித்தினால் கோமம் செய்தல். பவளம் பதித்த அணிகலங்கள் அணிந்து கொள்ளல். இதனால் நிறைவான செல்வம் கிடைக்கும். மாங்கல்லியப்பாக்கியம் உண்டாகும். நிலம் காணிகள் சேர்க்கவும், அவை சம்பந்தமான பிரச்சனைகள் விலகவும். பலவீனமான ஒழுக்கங்கள் அகலவும். பகைகள் அற்றுப்போகவும். திடீர் விபத்துக்களைத் தவிர்க்கவும். கடன் தொல்லை நீங்கவும், கோப தாபங்கள் நீங்கி அமைதி ஏற்படவும். படைத்தலைமைப்பதவி கிட்டவும், அதிகார வல்லமை பெறவும், வீரம், உற்சாகம் பெறவும், போர் வீரர்கள், மட்பாண்டங்கள் செய்பவர்கள், அறுவைச்சிகிச்சை மருத்துவர்கள், பொறியியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், தங்கள் வளர்ச்சிகும் செவ்வாய் பகவானைத் துதித்து நன்மை அடையலாம். சுப்ரமணியரின் அருளும் கிடைக்கப் பெறும்.

## புதன்



புதபகவான் வயிறு, நாக்கு, நுரையீரல், தோல், கைகள், வாய் ஆகிய பகுதிகளைக் குறிக்கின்றது. இவற்றில் ஏற்படும் நோய்களைத் தவிர்க்கவும். புத்திர சம்பத்து உண்டாகவும், விஷரோகம் அகலவும். ஆண்மைக் குறைவு, காது கேளாமை, வாத நோய்கள் முதலிய குறைபாடுகளை நீக்கவும். நண்பர்கள் பற்றிய இயல்புகளை அறியவும், கல்வி, ஞானம், வாக்குச் சாதுர்யம், கதை, சங்கீதம், சோதிடம், பிரசங்கம், காவியம், உபாசின, யுத்தி முதலியனவற்றில் தேர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்படவும் அருள் புரிபவர் புதபகவான் ஆவார். வியாபாரிகள், கணக்காளர்கள், வாகன ஓட்டுனர்கள், சிற்பாச்சாரிகள். சங்கீதம் முதலான மேற்கூறிய கலைகளில் ஈடுபடுவர்கள், தங்கள் துறைகளில் மேன்மையடைய புதபகவானே அருள்புரிபவர் ஆவார். எனவே புதபகவான் அருள்வேண்டி புத வாரங்களில் விரதம் இருந்து புதக் கிரகத்திற்கு மஞ்சள், பச்சை நிறவஸ்திரம் அணிவித்து மஞ்கள் நிற பூக்களாலும், வெண்காந்தள் மலரினாலும் அர்ச்சித்தும், பால் அன்னம் படைத்தும், பச்சைப்பயற்றினைத் தானமாகக் கொடுத்தும், நாயுருவிச் சமித்தினால் கோமம் செய்தும், மரகதப்பச்சை இரத்தினம் பதித்த ஆபரணம் அணிந்து கொள்வதனாளும் புதபகவானை மகிழ்வித்து அருள் பெற்றுக் கொள்ளலாம். விஷ்ணுவின் அருளும் கிடைக்கப் பெறும்.

## வியாழன்



வியாழபகவான் தொடை, சிறுநீரகம், சதை, ரத்தம், கொழுப்பு, வலது காது, கல்லீரல் ஆகியவற்றினைக் குறிக்கின்றது. இவற்றில் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கும். புத்திரர்கள், புத்திரிகள் முதலியோரின் நிலைகளை அறிந்து கொள்வதற்கும் குரு பகவானே துணைநிற்பவர் ஆவார். ஒருவருடைய தயாள குணம்

மேலோங்கவும், நுண்ணறிவு பெருகவும், செல்வப்பெருக்கு உண்டாகவும், உடல் வளர்சி சிறப்படையவும் அருள்பவர் குரு ஆவார். ஞானம் சித்திக்க, யோகாப்பியாசம் சித்திக்கச் செய்பவர். சட்ட நிபுணர்கள், ஆசிரியர்கள், மதகுருமார்கள், பல சரக்கு வியாபாரிகள், கொடுக்கல் வாங்கல் தொழில் செய்பவர்கள் முதலானோர்கள் இவரை வழிபாடாற்றி சுப மான பலனை அனுபவிக்கலாம். மேலும் உயர் பதவிகள் கிட்டவும், எல்லோரும் போற்றும் வகையில் அரச சன்மானங்கள், பட்டங்கள் முதலியன கிடைக்கப் பெறும். குரு தோஷம் உள்ளவர்கள் வியாழக்கிழமை தோறும் விரதம் அனுஷ்டித்து வியாழபகவானுக்கு மஞ்சள் நிறப்பூக்களாலும், முல்லைப் பூவினாலும் அர்ச்சித்தல் வேண்டும். கடலையைத்தானமாக கொடுத்தும், அரசம் சமித்தினால் கோமமும் செய்து தயிர் சாதம் நிவேதித்தல் வேண்டும். அத்தோடு புஷ்ப ராகம் பதித்த ஆபரணம் அணிந்து கொள்வதனாலும் வியாழ பகவானை துதித்து அருள் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு பிரம்மா, தட்சணா மூர்த்தி ஆகியோர் அருளும் கிடைக்கப் பெறும்.

### சுக்கிரன்



சுக்கிர பகவான் கண்கள், விந்து, சிறுநீரகம், தொண்டை, கன்னம், முகவாய், பால் உணர்வைத் தூண்டும் உள்ளுறுப்புக்கள் ஆகியவற்றைக் குறிக்கும். இவற்றில் பாதிப்பும் நோய்களும் ஏற்படாதிருக்கவும், எக்ஸிமா நோய் நீங்கவும். கணவனாயின் மனைவி பற்றியும், மனைவியாயின் கணவன் பற்றியும் அறிந்து கொள்ளவும். தொழிலாளர் வசதி வாய்ப்பு சுகத்தை பெறுவதற்கும். பொழுது போக்குகள். கலாரசனைகள், வாகன வசதிகள், போக பாக்கியங்கள், காதல் விவகாரங்கள், ஆண் பெண் உறவில் கூடுதல் அன்னியோன்யம். இலட்சுமி கடாட்ஷம் முதலியவற்றில் மேன்மை கிடைக்கவும். பாடகர்கள், பரத நாட்டியக்கலைஞர்கள், அத்தர், ரத்தினக்கல் வியாபாரிகள், கப்பல் செலுத்தி வியாபாரம் செய்பவர்கள் முதலியோர்களுக்கு

சுக்கிர பகவானால் அருள் கிடைக்கவும். தோஷம் உள்ளவர்கள் வெள்ளிக் கிழமைகளில் விரதம் அனுஷ்டித்து வெள்ளை நிற வஸ்திரம் அணிவித்து, வெண்தாமரை, வெள்ளை நிற மலரினால் அர்சனை செய்தல். மொச்சைத் தானியத்தை தானமாக் கொடுத்தும், அத்திச் சமித்தினால் கோமமும் செய்து நெய் அன்னத்தினை நிவேதித்தும், வஜ்ர ரத்தினம் பதித்த ஆபரணத்தினை அணிந்து கொள்வதனாலும் சுக்கிர பகான் மகிழ்வுற்று அருள்புரிவார்.

## சனீஸ்வரன்



சனீஸ்வர பகவான் கால்கள், எலும்புகள், விலா எலும்புகள், தலைமுடி, நகம். இடது காது ஆகியவற்றைக் குறிக்கின்றது. இவ்வுறுப்புக் களில் உபாதைகள் ஏற்படாதிருக் கவும், பாரிச வாயு, புற்று நோய். இதய நோய், பித்த ரோகம், சித்தப்பிரமை, அங்கவீனம் முதலான நோய்கள் குறைபாடுகள் தீர வழிபட வேண்டியவர். நீண்ட ஆயுள், சேவகர்கள் விருத்தி, வயல் நிலம், திருப்தியான ஜீவனம் முதலியவற்றில் மேன்மை அடைய பிராத்திக்கப்பட வேண்டியவர். சிறப்பாக மரத்தொழிலில் ஈடுபடுபவர்கள் வழிபாடாற்றுவதனால் அதிக நன்மை அடையலாம். களவு, அரச தண்டனை, வீண்வார்த்தை பேசுதல், மனத்திருப்தியின்மை, துன்பம், களவு, அதிக போசனம்., வெட்கமின்மை, சிறை வாச பயம் முதலானவை நீங்கி நற்பலன் உண்டாகவும். தோஷம் உள்ளவர்களும் சனிக் கிழமைகளில் விரதம் அநுஸ்டித்து சனீஸ்வானுக்கு நீல நிற வஷ்திரம் அணிவித்தும் எள்ளினைத் தானமாகக் கொடுத்தும் கருங்குவளை மலரினால் அர்ச்சித்தும், வன்னிச் சமித்தினால் ஹோமங்கள் செய்தும். எள்ளுச் சேர்த்த அன்னம் நிவேதித்தும். நீல ரத்தினக்கல் பதித்த ஆபரணம் அணிந்து கொள்வதனாலும், சனீஷ்வர அருள் கிடைப்பதோடு சிவன், விஸ்ணு ஆகியோரினதும் அருளும் கிடைக்கின்றன.


## ராகு பகவான்



ராகுபகவான் சனீஸ்வரன் குறிக்கின்ற அதே உறுப்புக்களைத்தான் குறிக்கின்றது. அவ்வுறுப்புக்களில் பாதிப்பும் குறைபாடும் ஏற்படாமல் இருக்க ராகு கிரகத்தின் அருள் அவசியம் தேவை. அத்தோடு இருமல், வயிற்றுப் புண், தொழுநோய், இருதய நோய், வலிப்பு நோய், நீரினால் கண்டம் வெட்டுக்காயங்கள், திருடர்களால் பயம், சண்டைகள், சிறை பயம் முதலானவைகள் நீங்குவதற்கும், தந்தையின் தந்தை அதாவது பாட்டன் வம்சம் பற்றி அறிந்து கொள்வதற்கும், இராகு பகவான் துணைநிற்பார்.ராகு தோஷம் உள்ளவர்கள் ராகு பகவானை நினைத்து ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் இருந்து ராகுக்கிரகத்திற்கு கருமை அல்லது புகை நிறம் பொருந்திய பட்டு அணிவித்து, வடை அல்லது உழுந்தன்னம் முதலியன நிவேதித்து மந்தாரை, அறுகு முதலியவற்றினால் அர்ச்சனை செய்வித்து உழுந்துத் தானியம் தானமாகக் கொடுத்து கோமேதக ரத்தினம் பதித்த ஆபரணம் அணிந்து, ஆறுகம் புல்லினால் ஹோமம் செய்து, பிராத்தித்துக்கொள்ளல். இதனால் மேற்கூறிய தோஷங்கள் எல்லாம் நிவர்த்தியாகி கல்வித்திறன், பேச்சுத்திறன் முதலியன பெற்று துர்க்கை அம்பாள் அனுக்கிரகமும் கிடைக்கப் பெறும்.

## கேது பகவான்

கேது பகவான் செவ்வாய் பவகவான் குறிக்கின்ற ஆதே உறுப்புக்களைத்தான் குறிக்கின்றார்.



அவ்வுறுப்புக்களில் குறைபாடு நோய்கள் ஏற்படாதிருக்கவும், காது கேளாமை, திக்கு வாய், சின்னம்மை, சிரங்கு முதலியன ஏற்படாதிருக்கவும் கேதுக் கிரக வழிபாடு செய்தல் நன்று. அகங்காரம், ஏமாற்றப்படாமல் இருக்கவும், விபச்சாரம், பாவத் தொழிலில் முதலியவற்றில் ஈடுபடாது

இருக்கவும், தாயின் பெற்றோர் முதலான வம்சத்து சுப அசுப பலன்களை அறியவும், எதிர்பாராத மரணம், பகைமை உணர்ச்சி முதலியன ஏற்படாதிருக்கவும். கேதுக்கிரகத்தினை நினைத்து ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் இருந்து, கேது பகவானுக்கு செம்மை அல்லது பலவித நிறம் கூடிய வஸ்திரம் அணிவித்து செவ்வல்லி, வெண்டாமரை மலரினால் அர்ச்சித்தும், தர்ப்பையினால் ஹோமம் செய்தும். நிவேதித்தும் வைடூர்ய ரத்தினம் பதித்த ஆபரணம் அணிந்தும் பிராத்தனை செய்வதன் மூலம் கேது பகவானின் அருளும் விநாயகப் பெருமானின் அருளும் உண்டாகும்.

## நவக்ரஹ பாடல்கள்

01. சூரியன்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும், ஞாயிறே போற்றி
சூரியா போற்றி, சுதந்திரா போற்றி
வீரியா போற்றி, வினைகள் களைவாய்.

02. சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி, திருவருள் தருவாய்
சந்திரா போற்றி, சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

03. அங்காரகன் (செவ்வாய்)

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறையிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

04. புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலியானே
உதவியே யருளும் உத்தமா போற்றி

05. குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மனமுடன் வாழ மகிழ்வுடனருள்வாய்
ப்ருகஸ்பதி வியாழப் பரதகுரு நேசா
க்ரகதோஷ மின்றிக் கடாஷித்தருள்வாய்.

06. சுக்கிரன்

சுக்கிரமூர்த்தி சுபமிக யீவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

07. சனி

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தா தா

08. ராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆகவருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகுக்கனியே ரம்மியா போற்றி.

09. கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்,
வாதம், வம்பு வழக்கு களின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி

(நவக்ரஹப் பாடல்கள் நிறைவுறுகின்றன.)

# 17 தட்சணாமூர்த்தி - படவிளக்கம்



01. கல்லாலமரம்
02. ஜாபந்தம்
03. பத்ரபூரிமம்
04. ஜடாபாரம்
05. பிறைச்சந்திரன்
06. லலாடம்
07. அக்னி
08. காதோலை
09. ஏகருத்ராட்ஷம்
10. கண்டாபரணம்
11. ருத்ராட்ஷமாலை
12. தோள்வளை
13. உதரபந்தம்
14. உரஸ்சூத்திரம்
15. யக்ஞோபவீதம்
16. காப்பு
17. சுவடி
18. சுரோணிப்பட்டை
19. நந்தி
20. வீரகண்டாமணி
21. முயலகன்
22. சிலம்பு
23. தண்டை
24. வியாக்ரசர்மம்
25. உள்ளங்காலில் பத்மரேகை
26. வஸ்திரக்கட்டு
27. பத்மரேகை
28. சின்முத்திரை
29. பாகுமாலை
30. பாதுதாமம்
சனகாதி முனிவர்கள் (நால்வர்)
31. டமருகம் வீராசனம்
(பெருமான் அமர்ந்திருக்கும் அமைப்பு)
32. கங்கை
33. மகரகுண்டலம்
34. ஸ்தனசூத்திரம்

# (18) ஓரே பார்வையில் நவ

| கிரஹம் | மண்டலம் | வாஹனம் | ஆளும் ராசி | ரத்னம் | தான்யம் | ஸமித்து | நைவே |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | வட்டம் | குதிரை ரதம் | ஸிம்மம் | மாணிக்கம் | கோதுமை | எருக்கு | சர்க்க பொங் |
| சந்திரன் | சதுரம் | வெள்ளை குதிரை | கடகம் | முத்து | நெல் | பலாசு | நெய் ச பாயா |
| செவ்வாய் | முக்கோணம் | சிவப்பு ஆடு | மேஷ-விருச்சிகம் | பவளம் | துவரை | கருங்காலி | ஹவி |
| புதன் | பாணாகாரம் | சிங்கம் | மிதுனம் கன்யா | மரகதம் | பயறு | நாயுருவி | பா அன் |
| குரு | நீண்டசதுரம் | மஞ்சள் குதிரை | தனுஸ் மீனம் | புஷ்பராகம் | கொத்துக் கடலை | அரசு | தயிர் ச |
| சுக்ரன் | ஐங்கோணம் | வெள்ளை குதிரை | விருஷபம் துலாம் | வஜ்ரம் | வெள்ளை மொச்சை | அத்தி | நெ அன் |
| சனி | தனுராகாரம் | காக்கை | மகரம் கும்பம் | நீலம் | எள் | வன்னி | எள் ச |
| ராகு | முறவடிவம் | ஆடு | மீனம் | கோமேதகம் | உளுந்து | அறுகம்புல் | உளு தன் |
| கேது | த்வஜவடிவம் | சித்ர கபோதம் | மேஷம் | வைடூர்யம் | கொள் | தர்ப்பை | சித்தார |

* கிரகங்கள் ராசியில் சஞ்சரி

# நவநாயகர்கள் விபரம்

| நைவேத்யம் | வஸ்திரம் | தேவதை | இராகங்கள் | புஷ்பம் | கால அளவு* |
|---|---|---|---|---|---|
| சர்க்கரைப் பொங்கல் | சிவப்பு | சிவன் | ஸௌராஷ்ட்ரம் ராகம் | செந்தாமரை | 1 மாதம் |
| நெய் கலந்த பாயாசம் | வெள்ளை | கௌரீ | அசாவேரி | வெள்ளரளி | 2¼ நாள் |
| ஹவிஸ் | சிவப்பு | சுப்பிரமணியர் | ஸுரடி | சண்பகம் | 1½ மாதம் |
| பால் அன்னம் | பச்சை | விஷ்ணு | நாட குரஞ்சி | மந்தாரை | 1 மாதம் |
| தயிர் சாதம் | பொன்நிறம் | தட்சணாமூர்த்தி | அடானா | முல்லை | 1 வருடம் |
| நெய் அன்னம் | வெள்ளை | இந்திரன் | பருஜு | கருங்குவளை | 1 மாதம் |
| எள் சாதம் | கறுப்பு | சிவன், விஷ்ணு | ஜதுகுல காம்போஜி | வெண் காந்தல் | 2½ வருடம் |
| உளுந் தன்னம் | புகைநிறம் | துர்க்கை | இராம மனோஹரி (இராமப்ரியா) | செவ்வல்லி | 1½ வருடம் |
| சித்தாரன்னம் | பல வர்ணம் | சித்ரகுப்தன், விநாயகர் | சாமர (சண்முகப்ரியா) | வெண் தாமரை | 1½ வருடம் |

* சஞ்சரிக்கும் கால அளவுகள்



தாராதேவி சமேத குரு பகவான்

சரண்யா ஓவ்(f)செற் பிறின்ரேஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை.